பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 தை 20, வியாழக்கிழமை 02.02.2017 கதிர் 89

## பேரணி கலைப்பு

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு இறங்குதுறையை இந்தியாவுக்குத் தாரைவார்க்க அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்து, அதற்கு எதிராக நேற்றுப் பகல் கொழும்பு நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமாகச் சென்ற துறைமுக ஊழியர்கள், பொலிஸாரின் தடையை மீறி ஜனாதிபதி செயலகம் நோக்கி முன்னேற முயன்றனர். அவர்களை கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசியும் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும் பொலிஸார் துரத்தினர். (உ)

## ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு

# இலங்கையை வற்புறுத்தி மீண்டும் ஒரு பிரேரணை

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு,பெப்ரவரி 02

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கு ஜெனீவாவில் இன்னுமொரு பிரேரணை கொண்டு வரப்படுவது அவசியம் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை மற்றும் நேபாளத்துக்குப் பொறுப்பான பிரதிநிதியான நிபுணர் யொலண்டா பொஸ்டர்இவ்வாறுகூறியுள்ளார். இந்தச் செவ்வியில் அவர்

பக்கம் 20 >>>

## ஆட்சியை அசைக்க முடியாது ஜனாதிபதி மைத்திரி உறுதி!

கொழும்பு, பெப்.02

எவராலும் எமது ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் வரும் தேர்தலில் மக்கள் விரும்பினாலன்றி வேறு யாராலும் ஆட்சியை மாற்ற முடியாது என ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் அலிஹார் விளையாட்டரங்கில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதி

பக்கம் 20 >>>

## தீர்வுக்கு உதவ மஹிந்தவை அழைக்கின்றார் சம்பந்தன்

கொழும்பு,பெப்.02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பாமல் தீர்வுத்திட்ட நடவடிக்கைகளுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மக்களை ஒற்றுமைப்படுத்தி 70 வருடங்களாக இந்த நாட்டில் தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக்

பக்கம் 20 >>>

## ஜன. 13 இல் சுமந்திரனைக் கொல்ல ஐந்து சந்தேக நபர்களும் முயன்றனர்

### கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை

கொழும்பு, பெப்.02

தமது பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் 5 சந்தேக நபர்களும் கடந்த ஜனவரி 13 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொல்வதற்கு முயற்சித்தனர்.

– இவ்வாறு பயங்கரவாத விசாரணைப்பிரிவுப்பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில்

பக்கம் 20 >>>

## சுமந்திரனைக் கொல்லும் முயற்சி: உலகத் தமிழர் பேரவை அதிருப்தி

கொழும்பு, பெப். 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்ட சம்பவத்துக்கு உலகத் தமிழர் பேரவை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்தக்கொலைமுயற்சியைத் தடுக்க உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கொலை முயற்சிக்குப் பொறுப்

பக்கம் 20 >>>

## யாழ். நகரில் நேற்றும் வாள் வெட்டு முயற்சி!

### கஸ்தூரியார் வீதியில் அட்டாகம்

யாழ்ப்பாணம், பெப்.02

நேற்று மாலை யாழ். கஸ்தூரியார் வீதியில் வீடொன்றின் முன்னால் நின்ற இளைஞர்கள் மீது, 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட வாள்வெட்டுக் குழு ஒன்று வாள்வெட்டு நடத்த முயன்றுள்ளது.

நேற்று மாலை 6.40 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடொன்றுக்கு முன் 4 இளைஞர்கள் நின்றுள்ளனர். இந்நிலையில் அப்பகுதியால்

பக்கம் 20 >>>

## சுமந்திரனுக்கு உள்ள அச்சுறுத்தலுக்கு அவரே பொறுப்பு என்கிறார் மஹிந்தர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தலுக்கு அவரே பொறுப்புக் கூறவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அனுராதபுரம் ஸ்ரீ மகாபோதி விகாரைக்கு விஜயம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப்புலிகளை விடுதலை செய்யுமாறு கோரி அன்று குரல் எழுப்பியவர்கள் இன்று எம்மைக் குறை கூறுகின்றனர். விடுதலைப்புலிகளை விடுதலை செய்தது தவறில்லை. அரசு தேசிய பாதுகாப்பை பலவீனமாகக் கையாளுகின்றமையே தவறாகும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ஒ)

அளப்பு அருணாசலம்



அப்ப... துப்பாக்கி – வீர சாகசம்;
இப்ப... வாள் – அட்டகாசம்...!

## பாடசாலை மாணவர்களும் வாள்வெட்டு அட்டகாசத்தில்

– எஸ்.நிதர்ஷன் –

யாழில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் பாடசாலை மாணவர்களும், பாடசாலையை விட்டு அப்போது தான் வெளியேறிய மாணவர்களுமே ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவித்திருக்கின்ற பொலிஸார் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டுவருகின்றவர்களை கைது செய்கின்ற நடவடிக்கை

பக்கம் 20 >>>

## உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கூட்டு எதிரணி களம் இறங்கும்!

கொழும்பு,பெப். 02

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டு எதிரணி கட்டாயம் போட்டியிடும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிலாபம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில

பக்கம் 20 >>>

## கூட்டமைப்புடன் மனம் திறந்து பேசினால் தீர்வு சாத்தியம் என்கிறார் அத்துரலிய தேரர்

கொழும்பு, பெப்.02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மனம் திறந்து பேசினால் அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு முடிவுக்கு வரமுடியும் என்று அண்மையில் அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியரத்னதேரர்தெரிவித்துள்ளார்.


தெற்கைக் குழப்பி ஒரு போதும் வடக்குக்குத் தீர்வைக் கொடுக்க முடியாது. அது நிலையான தீர்வாக அமையாது என்று தமிழ்த் தலைவர்கள் என்னிடம் கூறியுள்ளனர். தெற்கின் இணக்

பக்கம் 19 >>>

# ஐவர் கொண்ட வாள் வெட்டுக் குழு யாழ். பொலிஸாரிடம் சிக்கியது!

## வாள்கள், கத்திகள், கோடரிகள், மீட்பு





**- எஸ்.நிதர்ஷன் -**

யாழ்ப்பாணம்,பெப்.02

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்று வரும் வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய வாள்வெட்டுக் குறூப் ஒன்றைப் பிடித்திருக்கின்ற யாழ்ப்பாணம் பொலிஸார் அவர்களிடமிருந்து வாள்கள், கத்திகள் ,கோடரிகள் என்பனவற்றை மீட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் பின்னணியில் பல குழுக்கள் இருக்கின்றன எனத்தெரிவிக்கப் பட்டுப் பலரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டும் இருக்கின்றனர்.

ஆயினும், தொடர்ந்தும் வாள்வெட்டுக்கள் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பொலிஸாரால் ஐந்து பேர் கொண்ட குழுவொன்று பிடிக்கப்பட்டிருந்தது.

இவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களிடமிருந்து வாள்கள், கத்திகள் உட்பட கோஷ்டி மோதலுக்குப் பயன்படுத்தப்படும் பல ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பொலிஸாரால் பிடிக்கப்பட்ட குறித்த ஐந்து பேரையும் தாங்கள் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வட்டுக்கோட்டை கிரிக்கெட் மோதலில் கொலை:

# அமலனை அடித்துக் கொல்வதை நேரில் கண்டார் என்று சாட்சியம்

"யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள் இரும்புக் கம்பி மற்றும் தடிகளால் அமலனை அடித்து கொலை செய்தமையை நான் கண்டேன்."

இவ்வாறு சம்பவத்தை நேரில் கண்டவர் எனக் கூறப்படும் செல்வரட்ணம் அன்ரனி விமலதாஸ் என்ற நபர் நேற்று யாழ். நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நிலத்தில் வீழ்ந்த அமலனை சுற்றி 5,6 பேர் கூட்டமாக நின்று இரும்புக்கம்பி மற்றும் தடிகளினால்தாக்கிக்கொண்டிருந்தமையைக் கண்டேன். நான் ஓடிச் சென்ற இடத்தில் இருந்து நின்று பார்த்தபோது, அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீசேட்டை அணிந்திருந்தனர். அமலன் மீது தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த போது அவர்களின் கைகளில் இரும்புக்கம்பிஒன்றும், டிரம் செட் அடிக்கும் தடியும், பெரிய தடி ஒன்றும் காணப்பட்டன. நாங்கள் ஓடிப்போய் அமலனைத் தூக்க முற்பட்டபோது அவர் இறந்த நிலையில் காணப்பட்டார். ஆனால், இரத்தம் எதுவும் வரவில்லை. மூளையின் முன்னாண் பகுதியில் மேற்கொண்ட தாக்குதலே அமலனின் இறப்புக்குக் காரணம்." - இவ்வாறு மேலும் தெரிவித்தார் வட்டுக்கோட்டை கொலை வழக்கின் மூன்றாவது சாட்சியான செல்வரட்ணம் அன்ரனி விமலதாஸ்.

2014ஆம் ஆண்டு மார்ச் மாதம்15ஆம்திகதியாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களுக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களுக்கும் இடையில் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற துடுப்பாட்டப் போட்டியின் போது யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனான ஜெயரட்ணம் தர்சன் அமலன் என்ற இளைஞர் மைதானத்தில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலை தொடர்பான விசாரணை நேற்றில் இருந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடர் விசாரணையாக யாழ். மேல் நீதிமன்றில் இடம் பெறவுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஆரம்ப சாட்சியப் பதிவின்போது முதலாம், இரண்டாம், சாட்சிகள் மன்றுக்குச் சமுகமளிக்கத் தவறியிருந்தமையை அடுத்து மூன்றாவது சாட்சியின் சாட்சியத்தின் பதிவுகள் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்றது.

சட்டமாஅதிபர் திணைக்களத்தின்பிரதிசொலிஸிட்டர்ஜெனரல் நாகரட்ணம் நிசாந்த் சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

இதன் போது மூன்றாவது சாட்சி மன்றில் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

எங்கள்கல்லூரியின்பழைய மாணவர்களும் ஆடிக்கொண்டிருந்தனர், அப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களும் மைதானத்தின் ஒரு புறத்தில் நின்று ஆடிக்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் எங்களுடைய பழைய மாணவர்கள் ஆடிக்கொண்டிருந்த இடத்துக்கு வந்து திடீரென தாக்குதல் மேற்கொண்டனர். நானும் ஏனைய மாணவர்களும் ஸ்ரேடியத்தில் இருந்து கீழே இறங்கி ஓடினோம். அப்போது நான் 10-20 மீற்றர் தூரத்தில் இருந்து பார்த்த போது அமலனை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்கள் தடியாலும், கம்பியாலும் தாக்கிக் கொண்டிருந்தனர்.

பின்னர் நாங்கள் வீதியால் வந்த எனக்கு தெரிந்த நபரின் கார் ஒன்றில் அமலனையும், அமிர்தலிங்கம் துஷியந்தனையும் ஏற்றிக்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்தோம். எனினும், அமலன் ஏற்கனவே இறந்துவிட்டார் எனவைத்தியர்கள் கூறினர். - என்றார்.

அரச சட்டத்தரணி "அடித்த நபர்களை இந்நீதிமன்றில் அடையாளம் காட்டமுடியுமா?" - என்று கேட்டார்.

சாட்சி வழக்கின் முதலாம், இரண்டாம்எதிரிகளைதாக்குதல் நடத்திய கூட்டத்தில் இருந்தவர்கள் மத்தியில் காணப்பட்டனர் என்று கூறினார்.

கேள்வி:உங்களுக்குஅடித்தவர்களைநீங்கள்திருப்பிஅடிக்கவில்லையா?

பதில்: இல்லை. அவர்கள் தரப்பில் நிறைய ஆட்கள் இருந்தபடியால் அடிக்கவில்லை.

தொடர்ந்து விசாரணை இடம் பெற்றது.

முதலாம் எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

மூன்றாவது சாட்சி, வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குச் சம்பவம் நடைபெற்று இரண்டு நாள்கள் கழித்து இரண்டாவது வாக்குமூலம் ஒன்றை அளித்தார் என்று தமது குறுக்கு விசாரணையின் போது கூறியுள்ளமையைச் சுட்டிக்காட்டி, அந்த வாக்குமூலத்தின் பிரதி ஒன்றைத் தங்களுக்கு வழங்குமாறு சுமந்திரன் கூறினார்.

அப்படி ஒரு வாக்கு மூலம் வழங்கப்படவேயில்லை என அரச சட்டத்தரணி பதிலளித்தார்.

சுமந்திரனின் குறுக்கு விசாரணையின் பிறிதொரு கட்டத்தில் சாட்சி, சில மாதங்கள் கழித்து ஊர்காவற்றுறைப்பொலிஸாருக்குத் தாம் மற்றும் ஒரு வாக்குமூலத்தையும்அளித்தார்என்றும் தெரிவித்தார். அந்தவாக்குமூலத்தின் பிரதியும் தங்களுக்குத் தரப்படவில்லை என சுமந்திரன் சுட்டிக் காட்டியபோது பிறிதொரு வாக்குமூலம் சாட்சியால் அளிக்கப்படவில்லை என்றார் அரச சட்டத்தரணி.

இவ்வாறு தன்னால் அளிக்கப்படாத வாக்குமூலங்களைத் தாம்வழங்கினார்என்றுதெரிவிக்கும் இத்தகைய ஒரு சாட்சியைத் தொடர்ந்து நம்பி விசாரணை செய்வதில் அர்த்தமில்லை என்று சுமந்திரன் வாதிட்டபோது அதனை ஏற்க நீதிபதி மறுத்தார்.

அக்கட்டத்தில், அரச சட்டத்தரணி மேற்படி சாட்சி ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அத்தகைய வாக்குமூலம் ஒன்றை அளித்தாரா என்பதைக் கண்டறிந்து உறுதிப்படுத்துவதற்குத் தமக்குக் கால அவகாசம் வழங்கும் விதத்தில் இன்று (வியாழன்) வரை வழக்கை ஒத்திவைக்குமாறு வேண்டினார்.

இத்தகைய குழப்பகரமான சாட்சியின் சாட்சியத்தில் தங்கியிருந்து வழக்கைத் தொடர்ந்து நடத்தும் யாழ். நீதிமன்றத்தின் முடிவுக்குஎதிராகமேன்முறையீடு செய்வதா என்பது குறித்து ஆலோசிப்பதற்கு இந்த ஒரு நாள் கால அவகாசம் தமக்கும் உதவியானது என்றார் எதிரி தரப்பு சட்டத்தரணி சுமந்திரன்.

அதையடுத்து வழக்கை இன்று வரை ஒத்திவைத்தார் நீதிபதி. (உ)

# வாள்வெட்டுச் சந்தேகநபர்கள் ஐந்து பேரும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், பெப்.02

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுவரும் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட ஐந்துபேரையும்14நாள்களுக்குவிளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பல்வேறுவாள்வெட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நேற்று முன்தினம்ஐவர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று யாழ். நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். இதன்போதே ஐந்து சந்தேக நபர்களையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான்நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ)

# அபிவிருத்தியில் அரசு தவறினால் இளைஞரின் எதிர்காலம் பாதிப்பு

## இப்படிக் கூறுகின்றார் பிரதமர்

கொழும்பு, பெப்.02

அபிவிருத்திக்கான சவால்களை எதிர்கொள்வதற்கு அரசுக்கு முடியாமல்போகுமாக இருந்தால் இளம்சமுதாயத்தினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்ய முடியாத நிலைமை ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று குடகம்மன பிரதேசத்தில் இடம்பெற்ற மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டப் பணிகளின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அரசு நல்ல கொள்கைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தி முன்னேறிச் செல்ல வேண்டும். அதனைச் செய்ய முடியாமல் போனால் இளைஞர்களுக்கும் நாட்டுக்கும் எதிர்காலம் இல்லை. அனைத்து இலங்கையர்களையும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பிரதமர் தெரிவித்தார்.

மீரிகமவிலிருந்து குருநாகல் வரையான 39 கிலோ மீற்றர்களைக்கொண்ட மத்திய அதிவேகப்பாதையின் இரண்டாம் கட்டப் பணிகளை 2019 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஒ)

# குற்றத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு முடிவு

குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போது குற்றத்தடுப்புக் கட்டளைச் சட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள குற்றங்கள் பட்டியலில் உள்ள குற்றங்களுக்காக மாத்திரமே ஏதேனுமொரு சந்தேகநபரின் விரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

குற்றங்கள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்து கொள்ளல் மற்றும் அவர்களைக் கண்காணிக்கின்றமையை இலகுபடுத்துவதற்காக அவர்களின் விரல் அடையாளங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் குற்றங்களின் பட்டியலைத் திருத்துவதற்கும், அவ்வகையான குற்றமொன்றுக்கு குற்றம் சாட்டப்பட்ட ஆளொருவருக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனையொன்று விதிக்கப்பட்டுள்ளபோது, மற்றும் அந்நபர் தொடர்பாக முன்னைய தவறுகள் நிரூபிக்கப்பட்டிருக்கும் போது, இடைநிறுத்தப்பட்ட தண்டனை வலுவிலிருக்கும் காலம் முடியும் வரை அந்நபர் பொலிஸ் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட வேண்டுமென நீதிமன்றத்தால் உத்தரவு விதிக்கப் படமுடியுமானவகையில் குற்றத் தடுப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான புதிய சட்ட மூலத்தை அரச வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடுவதற்கும் பின்னர் அனுமதிக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதி அமைச்சர் விஜயதாசராஜபக்ஷவினால்முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஒ)

# வரும்போது 'நல்லாட்சி அரசு'; இப்போது ரணிலின் 'கம்பனி'!

## இப்படிக் கூறுகிறார் மஹிந்தானந்த

கொழும்பு,பெப். 02

நல்லாட்சி என்று கூறிப் பதவிக்கு வந்த அரசு, தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் தனியார் நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று கூட்டு எதிரணி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசு தற்போது தனியார் நிறுவனமாக மாறிவிட்டது. இந்த நிறுவனம் வங்கி, நிதி நடவடிக்கைகள் தொடர்பில் உலகப் பிரசித்தி பெற்றுள்ளது.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருக்கும் போது இந்தக் கொள்ளைகள் நடக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் தனியார் நிறுவனத்துக்கு நாட்டை ஆளுவதற்கு இடமளிப்பதா, இல்லை அவர்களைக் கைது செய்து சட்டத்தை அமுல்ப்படுத்துவதா என்று தீர்மானம் எடுப்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு உள்ள முக்கிய சவாலாகும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.02

பராமரிப்புப் பணிக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தெற்கிலுப்பைக் குளம் கிராமத்திலும் -

மன்னார் பிரதேசத்தில் தோமஸ்புரி, வங்காலை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் நகரம் ஆகிய இடங்களிலும்-

மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## பல்கலை அனுமதி: இன்று வழிகாட்டல் கருத்தரங்கு

நெல்லியடி, பெப்.02

வடமராட்சி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு- இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும்.

இந்தக் கருத்தரங்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பயிற்சி பெற்ற வளவாளர்களால் நடத்தப்பட உள்ளதால் அனைத்து மாணவர்களையும் வருகை தந்து பயனடையுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## வளர்ப்பு நாய்களுக்கு நாளை தடுப்பூசி

யாழ்ப்பாணம், பெப்.02

யாழ் மாநகரசபை எல்லைக்குள் நல்லூர்ப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) நாளை வெள்ளிக்கிழமை பின்வரும் இடங்களில் போடப்படும் என்று யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

★நாவலர் வீதி ஆனைப்பந்தியில் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை -

★பருத்தித்துறை வீதி, உயர்கலைக் கல்லூரிக்கு அருகில் முற்பகல் 11 மணி முதல்பிற்பகல் ஒரு மணிவரை-

★அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 4 மணி வரை. (இ)

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், பெப்.02

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ பூதநாத சுவாமி ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய ஆதீன கர்த்தா தெரிவித்துள்ளார். (ச)

# சர்வதேசத்தின் தலையீடின்றி தமிழருக்குத் தீர்வு இல்லை

### மட்டு.நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப்.02

சர்வதேச நாடுகளின் தலையீடு இல்லாமல் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நிரந்தரத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ் வரன் தெரிவித்தார்.



நாடாளுமன்ற உறுப்பினரின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு;

''சிறுபான்மையின மக்களின் ஆதரவுடன் ஆட்சிப் பீடம் ஏறிய அரசு காணாமல் போனோரின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் அஹிம்சை ரீதியான போராட்டங்களைக் கொச்சைப் படுத்துகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அலைந்து. இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடியுங்கள் என்று வலியுத்தி பெரிய உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிநாடு சென்றி ருப்பார்கள் அல்லது இறந்தி ருப்பார்கள் என்று நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்து எமது மக்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. இது ஒரு நாட்டின் பிரதமர் கூறக்கூடிய கருத்து அல்ல.

பிரதமர் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் நேசிக்க வேண்டும். பிரதமரின் இந்த கருத்து நாட்டில் நல்லாட்சி நடைபெறுகிறதா? வெளிநாடுகளுக்கு சென்றிருப்பார்கள் என்றால் பிரதமரா அனுப்பி வைத்தார்? என்ற கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது.'' என்றார். (எ)

## கட்டுப்பாட்டு விலையை மீறினால் நடவடிக்கை

வவுனியாவில் கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசியப் பொருள் களை விற்பனை செய்யாத வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்தவை வருமாறு;

சீனி மைசூர் பருப்பு, பயறு மற்றும் பொருள்கள் சிலவற்றுக்குக் கட்டுப்பாட்டு விலைகள்அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப்பொருள்களை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- (வ-100)

## விளையாட்டு வாரம் பெப்.6 இல் ஆரம்பம்

விளையாட்டுத்துறை அமைச்சால் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் விளையாட்டு மற்றும் உடல்நல மேம்பாட்டு தேசிய வாரம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் நடைமுறைப்படுத்தப்படும் .

நலம்,மகிழ்ச்சி, வெற்றிக்கான விளையாட்டு என்ற தொனிப் பொருளில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (எ)

## வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலைக் கட்டடம் நேற்று திறப்பு



வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலைக் கட்டடம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண கல்வி அமைச்சின் குறித்தொதுக் கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலையின் வகுப்பறைக் கட்டடத் தொகுதி மற்றும் சிறுவர் விளையாட்டு திடல் என்பவற்றை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையின் அதிபர் திருமதி தியாகசோதி யுவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆரம்ப பாடசாலை மாணவர்களால் விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப் பட்டு பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் பட்டது.

இதன்போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் விளையாட்டுத் திடலிலும் விளையாடி மகிழ்ந்தனர். இந்தநிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி. நடராஜா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ-100)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவருக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

நெல்லியடிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் நளினி கந்தசாமி. நெல்லியடிப் பொலிஸாரும் இலங்கை மின்சார சபையினரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது பிரஸ்தாப நபர் அகப்பட்டுக் கொண்டார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த செவ்வாயன்று அந் நபர் முற்படுத்தப்பட்டார். அப்போது மேற்கண்ட அபராதம் விதிக்கப்பட்டது. (இ-40)

### தங்கம்மா அப்பாக்குட்டி அறநிதியக்கொடை:

## தென்மராட்சி மாணவர் 100 பேருக்கு இம்முறை உதவித் திட்டம் வழங்கல்

தெல்லிப்பழை, பெப்.02

தெல்லிப்பழை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறநிதியக் கொடைத் திட்டத்தின் கீழ்-

க.பொ.த சாதாரண தரத்தைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் நலிந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டம் இந்த ஆண்டு தென்மராட்சி மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த உதவி தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப் படும். (ச)

மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 4017 \| வே<br>1965 \| காரைநகர் \| Divorced<br>Business \| இலங்கை<br>பூரட்டாதி (மீனம்) \| 175 cm | 5698 \| கு<br>1978 \| சங்கானை \| 168 cm<br>Teacher \| இலங்கை<br>திருவோணம் (மகரம்) |
| 3322 \| வே<br>1980 \| நீர்வேலி \| 172 cm<br>Development Officer \| இலங்கை<br>உத்திரட்டாதி (மீனம்) \| கி.பா: 5 | 6804 \| கு<br>1978 \| பருத்தித்துறை \| 167 cm<br>Librarian \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 38 |
| 4564 \| வே<br>1980 \| கோப்பாய் \| 162 cm<br>Building Contractor \| இலங்கை<br>சதயம் (கும்பம்) \| கி.பா: 5 | 3198 \| கோ<br>1978 \| வரணி \| 156 cm<br>Management Assistant \| இலங்கை<br>அவிட்டம்(கும்பம்) \| கி.பா: 44 \| செவ்: 7 |
| 3469 \| கு<br>1980 \| காங்கேசன்துறை \| 179 cm<br>Photographer \| இலங்கை<br>பரணி (மேடம்) \| கி.பா: 44 | 5713 \| வே<br>1978 \| அல்வாய் \| 170 cm \| இலங்கை<br>Development Officer \| கி.பா: 60<br>கேட்டை (விருச்சிகம்) \| சூரி செவ்: 7 |
| 4546 \| கு<br>1980 \| யாழ்நகர் \| 177 cm<br>Video editor \| இலங்கை<br>பரணி (மேடம்) \| கி.பா: 34 | 5938 \| கோ + வே<br>1980 \| சுண்ணாகம் \| 160 cm<br>Nurse \| இலங்கை<br>ரோகினி (ரிஷபம்) \| கி.பா: 14 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# கட்சிப் பதிவுக் காட்சிகள்

**அரசியல் கட்சிகளின் பதிவு தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.**

நாட்டில் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்குமானால், அந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகி, சம்பந்தப்பட்ட தேர்தல் நடைபெற்று முடியும்வரை புதிய அரசியல் கட்சி ஒன்றைத் தேர்தல் ஆணையாளர் பதிவுசெய்ய முடியாது என்று ஒரு சட்ட விதி உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் 2012 இல் அறிவிக்கப்பட்டு இன்னமும் நடத்தப்படாமல் நிலுவையில் இருந்தன. அதனைக் காரணங்காட்டி, கடந்த ஐந்து வருடங்களாகப் புதிய கட்சி எதையும் பதியாமல் இழுத்தடித்து வந்தது தேர்தல் ஆணையம்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகப் புதிய தேர்தல் பிரகடனம் வெளியாவதற்கு முன்னர், அரசியல் கட்சிகளைப் பதிவதற்கான நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணையம் மீண்டும் ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே அரசியல் கட்சிகளைப் பதியும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டிருந்த வேளையில் புதிய கட்சிகளாகப் பதிவதற்கு வந்த சுமார் நாநூறு விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றனவாம்.

புதிதாகக் கட்சிகளைப் பதிவது பற்றிய அறிவித்தல் விடுக்கப்படுமானால், மேலும் ஐயாயிரம் விண்ணப்பங்கள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று கூறுகின்றார் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

கட்சிகளைப் பதிவு செய்வது தொடர்பான அறிவித்தலைத் தாம் விரைவில் வெளியிடவுள்ளார் எனத் தெரிவித்துள்ள அவர், அப்படி அறிவிக்கும் போது பிரேதப் பெட்டிகள் அமைக்கும் சங்கங்கள் கூட அரசியற் கட்சியாகப் பதிவுசெய்ய முன்வரும்நிலை காணப்படுகின்றது எனவும், அவர் விசனம் வெளியிட்டிருக்கின்றார்!

நாட்டில் ஏற்கனவே 64 பதிவுசெய்யப்பட்ட கட்சிகள் உள்ளன. அதுவே இலங்கை போன்ற சிறிய நாடு ஒன்றுக்கு அதிகம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மிகப் பெரிய நாடான இந்தியாவில் கூட, ஆக தேசியக் கட்சிகள் அறுபதும், மாநிலக் கட்சிகள் நூற்றியெழுபதும்தான் இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இங்கு மட்டும் இந்த நிலைமை வருவதற்குக் காரணம் என்ன? இதற்காக அரசியல் கட்சிகளாகப் பதிவுசெய்ய விண்ணப்பம் செய்யும் தரப்புக்களை அவர் நோவதில் பயனில்லை.

பின்வரும் விடயங்களைத் தேர்தல் ஆணையாளருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம், அது பொருத்தமானதே.

01. ஜனநாயகத் தேர்தல் என்றால் அதில் மிக முக்கியமானது தனிமனித கருத்துச் சுதந்திரமாகும். கடந்த முப்பதாண்டு கால இலங்கையின் தேர்தல்கள் தனிமனிதன் சுயேச்சையாகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பை மறுத்தமையால்தான் குழுக்களாக - கட்சிகளாக - அவர்கள் புதிது புதிதாக அரசியல் களத்தில் இறங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

பொதுத்தேர்தல் போன்றவற்றில் தனிமனித் சுதந்திரத்தை மறுத்து, சுயேச்சைக் குழுக்களாகத்தான் தேர்தல் களத்தில் இறங்க முடியும் என்ற சட்டங்களை மக்கள் மீது திணித்தமையும் -

தேசியப் பட்டியல் உறுப்பினர் தெரிவு போன்ற விடயங்களில் பல்வேறு தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டிருக்கும் ஒரே அணியின் சுயேச்சைக் குழுக்களை ஒன்றாகக் கருதாமல் தவிர்த்து, ஆக அரசியற் கட்சிகளை மட்டுமே ஒன்றாகப் பார்க்கும் விதத்தில் சட்ட ஏற்பாடுகளைப் புகுத்தியமையும் --

பிரேதப் பெட்டித் தயாரிப்பாளர் சங்கங்களைக்கூட வேறு வழியின்றி கட்சியாகப் பதிவுசெய்து களத்தில் இறக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியது என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும்.


02. எது, எப்படியென்றாலும் - சட்ட ஏற்பாடுகளையும் விதிமுறைகளையும் காட்டி நீண்ட பல வருடங்களாகப் புதிய அரசியற் கட்சிகளைப் பதிவுசெய்யாமல் தவிர்த்தமை, சாதனை அல்ல. அது இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளில், சட்ட ஏற்பாடுகளை வைத்து, சித்து விளையாட்டு நடத்திய கோமாளித்தனமாகும்.

இங்கு சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டிய செயற்பாடுகள் காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்கள் தாமதமாகின்ற போது அதுகுறித்து விசனம் வெளியிடும் தரப்பினர் - தேர்தல் தொடர்பான உயரதிகாரிகள் கூட -இத்தனை காலமும் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவதற்கான மக்களின் ஜனநாயக உரிமைகள் நீண்ட பல வருடங்களாக மறுக்கப்பட்டபோது, அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திப் பார்த்திருந்தனர் என்பதும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

03. அப்படி நீண்ட காலம் புதிய அரசியற் கட்சிகளைப் பதியாமல் இழுத்தடித்தமையால், ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட 64 அரசியற் கட்சிகளில் செயற்படாமல் - வெறும் கடிதத் தலைப்பு அரசியல் கட்சிகளாக - இருந்தவற்றின் நிர்வாகிகள் புதிய அரசியற்கட்சிகளை அவசரமாகப் பதிவுசெய்ய விரும்புவோருக்கு பலகோடி ரூபாவுக்கு தமது கட்சிகளைப் பேரம் பேசி விற்கும் நிலைமை நீடித்தது. பணமுள்ள தரப்புக்கள் ஏற்கனவே பதிவுசெய்த கட்சிகளை வைத்திருந்தோரிடம் பெரும்தொகைப் பணத்தைக் கொடுத்து அந்தக் கட்சியின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் ஒப்பத்துடன் தமது பெயருக்குக் கட்சியை மாற்றி, அதன் பின்னர் தாங்கள் விரும்பும் பெயருக்கு அக்கட்சியை பெயர் மாற்றம் செய்யும் "பிஸ்னெஸ்ம்" கூடத் தாராளமாக அரங்கேறியது.

இப்படி அரசியல் கட்சி ஒன்றைப் பதிவுசெய்து வைத்திருந்தால், தேவைப்படும் சமயங்களில் அதனை விற்றுப் பலகோடி ரூபா சம்பாதிக்கலாம் என்ற நிலைமை - போக்குவரத்து பஸ் தட அனுமதிப்பத்திரம் விற்பனை செய்வது போன்ற நிலைமை - ஏற்படுத்தப்பட்டமையும் கூட புதிய அரசியற் கட்சிகளைப் பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் குவியலாம் என்ற நிலைமைக்குக் காரணமாகும்.

இவை எல்லாம் இடம்பெறும்போது, அவற்றைத் தட்டிக்கேட்காத, பகிரங்கமாகக் குரல் எழுப்பாத அதிகாரிகள் வர்க்கம் இப்போது விசனம் தெரிவிப்பதில் அர்த்தமில்லையே!




# இலங்கை விவகாரங்களில் அமெ.தூதுவர் தலையிடுவதை உடன் நிறுத்த வேண்டும்

## கூட்டு எதிர்க்கட்சி எம்.பி.டலஸ் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.02

நம் நாட்டின் இறையாண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப் தலையிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரங்களில் அமெரிக்கா தலையீடு செய்யாது என்ற நோக்கில், அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் சில முக்கிய அதிகாரிகளை புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நீக்கியுள்ளார்என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

''ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான அமெரிக்கப் பிரதிநிதி சமந்தா பவர், அமெரிக்க துணை ராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால், ஜனநாயகத்துக்கான துணைச் செயலாளர் டொம் மொலினோவ்ஸ்கீ ஆகியோரை ஜனாதிபதி ட்ரம்ப் நீக்கியுள்ளார்.

நிசா பிஸ்வால் போன்றவர்களை இனிவரும் காலங்களில் இலங்கையில் பார்க்க முடியாது. அவர்கள் இனி மேல் விடுமுறைக்காக மட்டுமே நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.

நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யப் போவதில்லை என்ற கொள்கையை ஜனாதிபதி ட்ராம்ப் கொண்டுள்ளார்.

எனவே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப், அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இலங்கையின் இறையாண்மையை மதிக்கும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம்.''- என்றார். (எ)

# தனியார் மருத்துவக் கல்லூரி நாட்டுக்கு அவசியமில்லை

## கூட்டு எதிர்க்கட்சி எம்.பி. தினேஷ் கூறுகிறார்



கொழும்பு, பெப்.02

இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரி அவசியமில்லை என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்ய முடியும் என்பதால், இன்னும் காலம் இருக்கின்றது. எவ்வாறாயினும், இலங்கைக்குத் தனியார் மருத்துவக் கல்லூரி தேவையில்லை. தேவையென்றால் அரச மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க முடியும் என்றார்.

எனினும், தினேஷ் குணவர்தன அங்கம் வகித்த கடந்த அரசின் காலத்திலேயே, மாலபேயில் அமைந்துள்ள தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற் காசிய நிறுவனம் உருவாக்கப்பட்டது. இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

கடந்த ஆட்சிக்காலத்தில் இந்தக் கல்லூரி உருவாக்கப்பட்டாலும், இலங்கை மருத்துவ சங்கத்தால், ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று தீர்ப்புக் கிடைத்தது என்று தெரிவித்தார். (எ)

# கொழும்பில் ஜப்பானியக் கண்காட்சி

கொழும்பு, பெப்.02

ஜப்பானின் பாரம்பரிய கலை, கலாசாரம் மற்றும் வர்த்தகம் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சி ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை தொடக்கம் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதன்போது தொழில்நுட்பம் சார்ந்த பல விடயங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சி இலங்கை மக்களுக்கு ஜப்பான் தொடர்பான தகவல்களை நேரடியாக அறிந்து கொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக அமையும் என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கெனச்சி சுகனுமா தெரிவித்துள்ளார். (எ)

டெங்கிலிருந்து எம்மை நாமே காப்போம்

குப்பைகளை தரம் பிரித்து வேறு வேறான கொள்கலன்களில் சேகரித்து அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்து சுற்றுச்சூழலை சுத்தமாக்குவதன் மூலம் டெங்கு அபாயத்திலிருந்து மீள்வோம்.
* உக்கக் கூடிய கழிவுகளை பச்சை நிற கொள்கலன்களில் சேகரிப்போம்.
* பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை செம்மஞ்சள் நிற கொள்கலன்களில் சேகரிப்போம்.
* கடதாசிக் கழிவுகளை நீல நிற கொள்கலன்களில் சேகரிப்போம்

"சுத்தமான சூழலே சுகம் தரும்"

தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ்ப்பாணம்

## நாளை

03.02.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அச்சுவினி மு.இ 7.50 வரை
திதி : ஸப்தமி மு.இ 10.32 வரை
சுபநேரம் : 6.35 - 8.05 வரை
இராகுகாலம் : 11.05 - 12.35 வரை

## மெய்வன்மைப் போட்டி

அராலி சரஸ்வதி மகாவித்தியா லய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களக் கணக்காளர் இ.சந்திரதாஸும் கலந்து கொள்வர். (ச)

***

இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் தி.தேவத்யாளன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் திருமதி ம.ரஞ்சனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், வலிகாமம் கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கணேசலிங்கம் மற்றும் கி.சோமாஸ்கந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர்.

மரதன் ஓட்ட வீரர்களுக்கான பரிசில்களை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார். அவரது தாயார் அமரர் ஆறுமுகம் சரஸ்வதி அம்மையாரின் ஞாபகார்த்தமாக 100 வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

***

நீர்வேலி றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரியின் அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவனேசன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பொ.சற்குணநாதன் மற்றும் கு.மதனகுமார் ஆகியயோரும் கௌரவ விருந்தினராக து.சுகந்தனும் கலந்து கொள்வர். (இ)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு மாத இறுதிக்குள் நியமனம்

## வடமாகாண ஆளுநர் குரே உறுதிமொழி

பெப்ரவரி நிறைவுக்குள் வடமாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வட மாகாண தொண்டர் ஆசிரியர் பிரதிநிதிகளைச் சந்தித்த வடமாகாண ஆளுநர் மேற்படி உறுதிமொழியை வழங்கினார். அவ்வேளை அமைச்சரவை அனுமதிப் பத்திரம், நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதற்கு என நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின்பெயர் விவரங்கள் என்பன வற்றையும் வட மாகாண தொண்டர் ஆசிரியர்சங்கப் பிரதிநிதிகளிடம் ஆளுநர் வழங்கினார்.

இதேவேளைவட மாகாண தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான விசேட கூட்டம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்னால் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக வடமாகாண தொண்டர் ஆசிரியர்களின் சங்கத் தலைவர் இ.ஜெயராஜ் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் நியமனம் வழங்கப்படும் தொண்டர் ஆசிரியர்களின்பெயர் விவரங்கள் அறிவிக்கப்படும் என்றும் மேலதிக விவரங்களை 0776380629 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும். என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ - 70)

# தும்பளை லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தலத் திருவிழா

பருத்தித்துறை, பெப்.02

பருத்தித்துறை, தும்பளை தூய லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தலத் திருவிழா இன்று வியாழக்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தையும், மறைக் கோட்ட முதல்வருமாகிய அருட்பணி ஏ.யாவிஸ் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெற உள்ளன.

நவநாள்களின் போது அருட்பணி மில்பர் வாஸ் திருமறை உரை நிகழ்த்துவார். 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வழிபாட்டில் திவ்விய நற்கருணை விழாத் திருப்பலியும், ஆராதனையும் பவனியும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெறும். 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.30 மணிக்கும், 7.00 மணிக்கும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

திருவிழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக் கொடுப்பார். அதனைத் தொடர்ந்து தூய லூர்து அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். இத்திருத்தலத்தில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-40)

***

வட்டு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி பு.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய செயற்றிட்ட அலுவலர் ஏ.சிவரூபனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தொழிநுட்ப உத்தியோகத்தர் க.செந்தீபனும் கௌரவ விருந்தினராக சி.சச்சிதானந்த ஐயரும் கலந்துகொள்வர். (இ)

# மன்னார் வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

## வாழ்வுதய இயக்குநர் வழங்கினார்





மன்னார் மாவட்டத்தில் கறிற்ராஸ்- வாழ்வுதயம் தனது 36 வருட வளர்ச்சியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கை, கால்கள் போன்ற செயற்கை அவயவங்களைப் பொருத்தும் ஒரு பிரிவை உள்ளகத்துக்குள் உருவாக்கி அப்பிரிவு கடந்த செவ்வாய்க்கிழமை 18 வருடங்கள் நிறைவடைந்துள்ளது.

மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையின் உதவிவைத்திய அத்தியட்சகர் திருமதி றஜனி சிசில் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அதன் ஞாபகார்த்தமாக அன்றைய தினம் நோயாளர்கள் பயன்பெறும் பொருட்டுச் சக்கர நாற்காலிகளை வைத்திய சாலைக்கு அன்பளிப்பாக வாழ்வுதய இயக்குநர் அருட்பணி ம.ஜெயபாலன் அடிகளார் வழங்கினார். (இ-112)

# மீண்டும் மேடையேறுகின்றது மஹாகவியின் 'புதியதொரு வீடு'

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மஹாகவியின் 'புதியதொரு' வீடு நாடகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு காட்சிகளாக முற்பகல் 11மணிக்கும் மாலை 4 மணிக்கும் இலக்கம் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையக மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

1969 ஆம் ஆண்டு மஹாகவியால் எழுதப்பட்ட இந்நாடகம் முதன் முதலாக அ. தாஸீஸால் 1971 ஆம் ஆண்டு கொழும்பில் மேடையேற்றப்பட்டது. அதன்பின் பல தடவைகள் பல நெறியாளர்களால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளது.

1999 ஆம் ஆண்டு கொழும்பு திருமறைக் கலாமன்றத்தாலும் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்நாடகம், மிக நீண்ட காலத்தின் பின் மீண்டும் யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் தயாரிக்கப்பட்டு கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி கொழும்பிலும் ஒக்ரோபர் மாதம் 02ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது. இந்நாடகம் தற்போது மீண்டும் மேடையேற்றப்படுகின்றது.

மஹாகவியின் கவிதை நாடகமாகிய இந்நாடகம் மீனவக் கிராமமொன்றின் கதை மாந்தரினையும் கடலோடு தொடர்புடையதாக அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வின் சவால்களையும் வெளிப்படுத்துகின்றது. (இ)

# எம்மை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வளம் இங்கு உண்டு

## ஆறுதல் நிறுவனத்தின் பிரதம அதிகாரி சுந்தரம் டிவகலாலா தெரிவிப்பு

மந்திகை, பெப்.02

எம்மை நாமே அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வளம் எமது நாட்டில் தாராளமாக உள்ளது. அவற்றை நாம் சரியானவழியில் பயன்படுத்த வேண்டும். எம்மைச் சுற்றி நடக்கும் விடயங்களைச் சிந்திப்போம். அதை நாங்கள் செய்யத் தவறினால் எமக்கு எதிர்காலம் இல்லை. யாருக்கும் பயந்து செயற்படக் கூடாது. நாம் ஏன் யாருக்கும் பயந்து செயற்பட வேண்டும். நிதானமாகச் சிந்தித்துச் செயற்படுவோமேயானால் எதிர்காலம் ஒளிமயமானதாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளரும் ஆறுதல் நிறுவனத்தின் பிரதம அதிகாரியுமான சுந்தரம் டிவகலாலா.

கம்பர்மலையிலுள்ள வேலுப்பிள்ளை நினைவாலயம் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

எங்களுடைய கல்வி, பொருளாதாரம், தொழில்துறையை வளர்ப்பதற்கு என்னவளம் இங்கு இல்லை. எங்களுடைய பிள்ளைகள் சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் வாழ்வதற்காக வளம் எம்மிடம் உண்டு அதை நாங்கள் சிந்தித்துச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

2001 ஆம் ஆண்டு பெரிய ஒரு யுத்தம் நடைபெற்ற போது கல்வியில் கிளிநொச்சி மாவட்டம் முதல் நிலையில் இருந்தது. பங்கருக்குள் இருந்தும் மின்சாரம் இன்றியும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றனர். ஆனால், தற்போது சகல வசதிகளும் கிடைத்த போதும் கல்வியில் பின்னோக்கி நிற்கிறோம். இப்போது யுத்தம் இல்லை, ஓடத் தேவையில்லை, ஷெல் லுயில்லை, அப்படி இருக்கையில் நாம் கல்வியில் ஏன் கடைசி நிலைக்கு வந்தோம் என்பது சிந்திக்க வேண்டிய மிக மிக முக்கியமான விடயம். இது குறித்துச் சிந்திக்கத் தவறுவோமேயானால் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

இந்திய இராணுவம் இந்த மண்ணில் இருந்த போது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி அடிப்படையில் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை 37 வீதமாகும். ஆனால் இப்போது ஒரு வீதமான வர்களே போகின்றனர்.

பொருளாதார நிலையில் கடற்றொழிலுக்குப் போனால் இந்திய மீனவர்கள் தாக்குகிறார்கள். விவசாயம் என்று செய்கை பண்ணி சந்தைக்குப் போனால் தம்புள்ள மரக்கறிகள் குவிகின்றன. நாம் எங்கே முன்னேறுவது. இவற்றை எல்லாம் விரிவாகச் சிந்திக்க வேண்டும்.- என்றார். (ஐ-40)





மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் புதன்கிழமை காலை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிசி சுகனுமா, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹமட் நஸீர் ஜனாதிபதிக்கு ஞாபகார்த்தச் சின்னம் வழங்கினார். (ச)

## டிப்பர் சாரதிக்கு விளக்கமறியல்

விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட டிப்பர் வாகனச் சாரதியை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் உத்தரவிட்டார்.

திருகோணமலை -மட்டக்களப்பு பிரதான வீதியில் கங்கைப் பாலத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை டிப்பர் வாகனமும், ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் மூதூரைச் சேர்ந்த ஓட்டோ சாரதி எஸ்.திருமாறன் (வயது 40) உயிரிழந்தார். இதனை அடுத்து டிப்பர் வாகனச் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

# சமாதானத்துடன் கூடிய நல்லிணக்கம் புதிய அரசமைப்பால் நாட்டில் ஏற்படும்

### களுவாஞ்சிக்குடியில் ஜனாதிபதி சிறிசேன தெரிவிப்பு

களுவாஞ்சிக்குடி,பெப்.02

இந்த நாட்டில் அனைத்து மக்களும் சமாதானத்துடன் வாழ வேண்டும். இங்கு மீண்டும் யுத்தம் ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான் எமது அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக நாங்கள் புதிய தோர் அரசமைப்பை உருவாக்கப் போகின்றோம். நாங்கள் நாட்டை உடைக்கப்போகின்றோம்; பிரிக்கப் போகின்றோம்; நிர்மூலமாக்கப் போகின்றோம்- வெளிநாட்டுச் சக்திகளுக்கு அடிபணிந்து விட்டோம் எனப் பலவாறாகப் பேசுகிறார்கள். இவைகள் அனைத்தையும் நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். அரசாங்கத்தை வீழ்த்தி விடுவோம் என சிலர் சொல்கின்றார்கள். இதுபற்றி சிலர் கனவுகள் காணுகின்றார்கள். அவர்களது கனவுகள் ஒருபோதும் நனவாகாது.

-இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதிக்கான திறப்பு விழா நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு வைத்தியசாலையைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரே நாட்டுக்குள்பிளவுபடாமல் சமாதானத்துடன் வாழ வேண்டும் அதற்காகத்தான் அரசமைப்பை உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம் என எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். அந்த உத்தமமான நோக்கத்தை அடைவதற்காக அரசு என்ற வகையில் பணியாற்றி வருகின்றோம். எதிர்வரும் சில மாதங்களுக்குள் சில அடிப்படை வேலைகளை முடிக்கத் தயாராக இருக்கின்றோம்.

மாகாணசபைகளை ஏற்படுத்தும் காலகட்டத்தில் நாட்டில் என்ன நடந்தது என்று மக்களுக்கு தற்போது ஞாபகம் இருக்கலாம். மாகாணசபைகளை உருவாக்கும் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஒருமாகாண சபையிலிருந்து இன்னுமொரு மாகாண சபைக்கு போவதற்கு விசா எடுக்க வேண்டும் என பலர் சொன்னார்கள். மாகாணசபை சட்டத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் வெளிவந்த பத்திரிகைகளை தற்போது எடுத்துப் பாருங்கள். இன்று எவ்வாறு சத்தம் போடுகின்றார்களோ அவ்வாறுதான் அன்றும் கூக்குரலிட்டார்கள். எனவே, இந்த நாட்டுக்குள் வாழ்கின்ற அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்காகத்தான் நாங்கள் பணியாற்றி வருகின்றோம்.

என்னை ஜனாதிபதியாக ஆக்குவதற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மிகவும் விருப்பத்துடன் செயற்பட்டிருந்தார்கள். எமது நாட்டில் மிகவும் நீண்டகாலமாக நிலவி வந்த யுத்தத்தின் காரணத்தினால் வடக்கு, கிழக்கு மக்கள் மிகவும் கஷ்டத்தோடுதான் வாழ்ந்து வந்திருந்தார்கள். யுத்தத்துக்குப் பின்னர் இந்தநாட்டு மக்



களுக்குச் சிறந்த சேவை செய்வேன் என்ற எண் ணக் கருவில்தான் இந்த நாட்டு மக்கள் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள். சுகாதாரம், கல்வி மற்றும் கமத்தொழில் ஆகியவற்றுக்காக வேண்டி கிழக்கில் பெரும் பணியாற்றத் தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் சில வருடங்களில் கிழக்கிலுள்ள அனைத்துக் குறைபாடுகளும் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

அரசுக்கு எதிராகப் பல்வேறு விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. இந்த நாடு சுதந்திரமான நாடு என்ற வகையில் அரசைப் பார்த்து யாரும் விமர்சிக்க முடியும். கூடுதலான விமர்சனங்கள் தான் அதிகளவு மக்களுக்குப் பணியாற்றும் எமது சக்தியாகும். கடந்த காலங்களில் பணியாற்றியதை விட இன்னும் நாம் துரிதமாகப் பணியாற்றி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம்.-என்றார். (ச)

## கல்முனையில் 424 டெங்கு நோயாளர்கள்

அம்பாறை,பெப்.02

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கடந்த மாதம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 424 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அட்டாளைச் சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.அலாவுதீன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். நுளம்புகள் பெருக்கக்கூடிய வகையில் வெற்றுக் காணிகளை வைத்திருப்போருக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் இடங்களை வைத்திருப்போருக்கு உடனடியாக அபராதம் விதிப்பதற்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்காக நீர் நிலைகளில் மீன் வளர்க்கும் திட்டம் கல்முனைப் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

### அதிபர் சேவை தரம் 3 இற்கு நியமனம் பெற்ற

## புதிய அதிபர்கள் கடமையைப் பொறுப்பேற்பு

அக்கரைப்பற்று,பெப்.02

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் அதிபர் சேவை தரம் 3 இற்கு நியமனம் பெற்ற புதிய அதிபர்கள் 23 பேர் நேற்றுப் புதன்கிழமை கடமையைப் பொறுப்பேற்றனர் என அந்த வலயத்தின் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் தெரிவித்தார்.

இந்த வலயத்திலுள்ள பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்ட பாடசாலைகளிலேயே இந்த புதிய அதிபர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அதிபர் சேவை தரம் 3 இற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்த 328 அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் மத்திய அரசின் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அண்மையில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்க வேண்டும்

### கிழக்கு மாகாண அமைச்சர் தண்டாயுதபாணி கோருகிறார்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாலநகர் பகுதியில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக் குமாறு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி கோரிக்கை விடுத்தார்.

இந்தப் பகுதியில் உள்ள ஏனையோருக்கு காணி ஆவணங்களுடன் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட நிலையில், சுமார் 79 சுகாதாரத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கே காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் உள்ளன. இது நியாயமற்ற செயல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது, மாகாணக் கல்வி அமைச்சருடன் சேர்ந்து மாகாண சபை உறுப்பினர்களான கு.நாகேஸ்வரன், ஜே.ஜனார்த்தனன் ஆகியோர் இந்த மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற மனுவைக் கூட்டத்தில் முன்வைத்தனர். (ச)

# சிறந்தவொரு சந்ததியினரை கட்டியெழுப்புவதற்கு அறநெறிக் கல்வியை வலுப்படுத்தல் அவசியம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு,பெப்.02

சிறந்தவொரு சந்ததியினரை கட்டியெழுப்புவதற்கு அறநெறிப் (பிரிவெனா) பாடசாலையின் கல்வியினை வலுப்படுத்தல் அவசியமாகும் என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய பௌத்த புத்திஜீவிகளின் சபை நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற ஒன்று கூடல் ஒன்றை நடத்தியது. அந்நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அறநெறிப் பாடசாலை கல்வி முறைக்கான விடயதானத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் முறைமைப் படுத்தல் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எமது எதிர்காலச் சந்ததியினரை சிறந்தவொரு சமுதாயமாக கட்டியெழுப் புவதற்கு அறநெறிப் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளை வலுப்படுத்துவது அவசியமாகும்.

இலங்கையை தேரவாத பௌத்த மத்திய நிலையமாகக் கட்டியெழுப்பி சம்புத்த சாசனத்தின் நிலைத்தன்மைக்கு அரசாங்கம் என்ற வகையில் மேற்கொள்ளக்கூடிய அனைத்து பொறுப்புக்களையும் அது நிறைவேற்றுகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரிவெனா (அறநெறி) கல்வியை வலுப்படுத்தி, அதன் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவால் ஆற்றப்படும் பணிகள் தேசிய பௌத்த புத்திஜீவிகள் சபையின் பாராட்டுக்குள்ளாகியுள் ளது.

இந்நிலையில், பிரிவெனா (அறநெறி) கல்வியை



முன்னேற்றி அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஜனாதிபதி ஆலோசனையின்படி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள் குறித்து பிரிவெனா பணிப்பாளர் பேராசிரியர் வண. நாபிரித் தன்கடவர ஞானரத் தன தேரர் ஜனாதிபதியிடம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒன்றுகூடலின் போது, விகாரைகளை மையப்படுத்திய பேண்தகு அபிவிருத்தி செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும், சர்வதேச வெசாக் உற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் சர்வதேச பௌத்தசம்மேளனத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (க)

# ஜெனிவாவில் கால அவகாசம் கோருவார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர

கொழும்பு,பெப்.02

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர காலஅவகாசம் கோருவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்று, இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து உரையாற்றவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி தொடங்கி, மார்ச் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்வரும் 28ஆம் திகதி உரையாற்றவுள்ளார்.

இதன் போது அவர் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக விவரிக்கவுள்ளார்.

அத்துடன், 29 ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் காலஅவகாசத்தைக் கோருவார் என்றும், இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் ஒன்றுக்கு ஆதரவு கோருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே இலங்கை தொடர்பான விவாதம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும், மார்ச் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல்ஹுசேன் சமர்ப்பிக்கும் அறிக்கையை முன்வைத்து இந்த விவாதம் இடம்பெறும்.

பேரவையின் 29ஆவது கூட்டத்தொடரில் நிறை



வேற்றப்பட்ட தீர்மானம் எந்தளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில் விவரிப்பார்.

ஏற்கனவே அவர் சமர்ப்பித்த வாய்மொழி அறிக்கையில், ஜெனிவா தீர்மானத்தின் பரிந்துரைகள், மெதுவாகவே நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டிருந்தார். (க)

# சீனா, சிங்கப்பூர் ,மலேசியா ஆகிய நாடுகளைப்போன்று இலங்கையிலும் பிராந்திய அபிவிருத்தி வேலைத்திட்டம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு,பெப்.02

சீனா, சிங்கப்பூர்,மலேசியா ஆகிய நாடுகளின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட திட்டங்களைப் போன்று இலங்கையிலும் பிராந்திய ரீதியிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இங்கு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனா, சிங்கப்பூர் , மலேசியா தாய்லாந்து போன்ற நாடுகள் துரிதமாக அபிவிருத்தியடைவதற்கு காரணம் அந்த நாடுகளில் பெரும் பிரதேசங்கள் பலவற்றை ஒன்றிணைத்து அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டமையே யாகும்.

இதேபோன்று இலங்கையிலும் பிராந்திய ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இளைஞர் - யுவதிகளின் தொழில் இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண திட்டமிட்ட வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்திருக்கிறது.

மேற்கு, வடமேல், மத்திய, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களை உள்ளடக்கும் வகையிலான அபிவிருத்தி வலயம் ஏற்படுத்தப்படும்.



அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிங்கிரிய பிரதேசத்தில் வர்த்தக வலயம் ஒன்றுக்காக 800 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரணவில பிரதேசத்தில் 500 ஏக்கரில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி வலயம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒரே சக்தியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டமையே ஆகும்.

சமகால தேசிய அரசாங்கத்தின் மூலமாக நன்மைகளை அனைவரும் எதிர்காலத்தில் அனுபவிக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கை

# இந்திய கடலோரக் காவல் படை இலங்கைக் கடற்படைக்கு உதவும்

கொழும்பு,பெப்.02


ஐந்து நாள்கள் அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, இந்திய இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

புதுடில்லியில் உள்ள இந்திய இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்துக்கும், இலங்கை கடற்படைத் தளபதிக்கும் இடையில் நடந்த இந்தப் பேச்சுக்களின் போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இந்திய- இலங்கை படைகளுக்கிடையில் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இலங்கை கடற்படைத் தளபதி இந்தியா சென்றிருந்தார். அதேவேளை, மாசு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது, இலங்கை கடற்படைக்கு உதவ இந்திய கடலோரக் காவல்படை முடிவு செய்துள்ளது.

தேவையேற்படும் போது, இலங்கைக் கடற்படைக்கு இந்த உதவியை இந்தியக் கடலோ



ரக் காவல்படை வழங்கும்.

கடந்த திங்கட்கிழமை இந்திய கடலோரக் காவல்படை பணிப்பாளர் ராஜேந்திர சிங்குக்கும், இலங்கை கடற்படைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# ஊர்களது பெயர்களை அரசியல் இலாபத்துக்காக உச்சரிக்கும் அரசியல்வாதிகளால் என்ன பயன்?

## விசனம் தெரிவிக்கின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள்

முல்லைத்தீவு, பெப்.02

ஊர்களின் பெயரை அதிகளவில் உச்சரிக்கும் அரசியல்வாதிகள் ஊருக்கு வருவதில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மக்கள் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இறுதி யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களான முல்லைத்தீவின் மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய கிராமங்களின் பெயர்களை அதிகளவில் உச்சரிக்கும் அரசியல்வாதிகள் தங்கள் கிராமங்களுக்கு வருகை தந்து மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொள்வதில்லை.

அரசியல் கூட்டங்களில் முள்ளிவாய்க்கால், மாத்தளன், அம்பலவன்பொக்கணை என்று பெயர்கள் சொல்லித் தங்களுடைய அரசியல் வாழ்வை நகர்த்துகின்றனர்.

இந்தப் பகுதியில் 450 வரையான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் இரட்டை வாய்க்கால் தொடக்கம்சாலை வரையான முதன்மை வீதி புனரமைக்கப்படவில்லை.

கிராமங்களின் உள் வீதிகள் புனரமைக்கப்படாதமையின் காரணமாக அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்கள் மழை காலத்தில் வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் காரணமாகச் சப்பாத்துகளைக் கழற்றி கைகளில் ஏந்திச் செல்லும் நிலைமை காணப்படுகிறது.

எங்களுடைய கிராமங்களைத் தமது அரசியலுக்காகப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள், எமது கிராமத்தின் வீதிகளைப் புனரமைத்தார்களா அல்லது வாழ்வாதாரத்துக்கு உதவினார்களா? ஒன்றுமே செய்யவில்லை.

தேர்தல் காலத்தில் பஸ்களை எமது கிராமத்துக்கு அனுப்பி தமக்கு வாக்களிக்கச் செய்பவர்கள் எமது கிராமத்துக்குப் பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை என்பதைக் கருத்தில் கொண்டும் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை.

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசும் அரசியல்வாதிகளால் எமது கிராமம் வளரவுமில்லை; நிமிரவும் இல்லை.

நெருக்கடிகளுடனேயே மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். எமது கிராமத்தின் பெயர்களை அரசியல்வாதிகள் தமது சுய இலாப அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றமையை நிறுத்திக்கொள்வதே சிறந்ததாக இருக்கும்.-என்றனர்.

(ஐ- 70)

## தகரக்கொட்டகை பாடசாலைகளால் மாணவர் பாதிப்பு

கிளிநொச்சி, பெப்.02

கிளிநொச்சி கல்வி வலயத்தில் தகரக்கொட்டகைகளில் இயங்கும் பாடசாலைகளை நிரந்தரக் கட்டடங்களாக மாற்றுமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், கிளிநொச்சி வலயப் பாடசாலைகள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இயங்கத் தொடங்கிய நிலையில், பல பாடசாலைகளில் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. அவை தகரங்களாலும் கிடுகுகள் கொண்டும் உருவாக்கப்பட்டன. தகரக் கொட்டகைகளில் மாணவர்களால், கல்விகற்க முடியாது. வெயில் நேரத்தில் வெப்பத்தாலும் மாணவர்களின் கற்றல் பாதிப்படைகின்றது என்று பெற்றோர் கூறுகின்றனர்.

(எ)

## மாங்குளத்தில் பஸ் நிலையம் அமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.02

மாங்குளத்தில் பஸ் நிலையம் ஒன்றை அமைக்குமாறு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மாங்குளத்தில் அமைக்கப்படும் பஸ் நிலையத்தின் ஊடாக முல்லைத்தீவு, துணுக்காய், வெள்ளாங்குளம், முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு பஸ் சேவைகளை ஈடுபடுத்த முடியும்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் மாங்குளத்தில் பஸ் நிலையம் அமைப்பதன் ஊடாகப் போக்குவரத்துகள் இலகுபடுத்தப்படும்

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில், போக்குவரத்து நெருக்கடிகள் மிகுந்த பகுதிகளாக மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகள் காணப்படுகின்றன.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் பஸ்கள் பணியில் ஈடுபடாமையால் பாடசாலைகளுக்கு மாணவர்கள் நடந்தே செல்கின்றனர்.

அத்துடன், பிற மாவட்டங்களில் இருந்து துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிகளுக்குப் பணிக்குவரும் உத்தியோகத்தர்கள் மாங்குளத்தில் நீண்டநேரம் காத்திருந்தே பஸ்களில் பயணிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் இருந்து பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்கின்றன.- என்றுள்ளது.

(ஐ-81)

# அம்பலப்பெருமாள் குளத்தின் வான் கட்டுகளைப் புனரமைக்குக

## முல்லைத்தீவு மக்கள் வேண்டுகோள்



முல்லைத்தீவு, பெப்.02

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் வான் பகுதி கட்டுமானங்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததால் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே, அவற்றைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துணுக்காயில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியில் உயிலங்குளம் அணைக்கட்டு வீதி வழியாகவும் அம்பலப்பெருமாள் குளத்தின் வான் வழியாகவும் வாகனங்கள் பயணிக்கின்றன. இதன் காரணமாகக் குளத்தின் அணைக்கட்டுகள் வான் பகுதிகள் சேதமடைகின்றன என்று விவசாயிகளால் துணுக்காய் பிரதேச செயலக கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டு வந்தன.

எனினும், கிராமங்கள் உருவாக்கப்படும்போது போக்குவரத்துக்கு என அமைக்கப்பட்டவீதிகள் புனரமைக்கப்படாதமையின் காரணமாக விவசாயிகள் பயன்படுத்திய வீதிகள் முதன்மை போக்குவரத்து வீதிகளாக மாறின. இதன் காரணமாக சுமைகளுடன் வரும் கனரக வாகனங்களால் குளத்தின் வான் பகுதி, அணைக்கட்டு என்பன சேதமடைகின்றன. இதன் காரணமாகக் குளத்தின் நீர் மழை காலங்களில் வீண் விரயமாகும் நிலைமை காணப்படுகின்றது.

அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் ஐந்நூறு வரையான ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலையில் குளத்தின் வான் பகுதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ-70)

# கோணாவிலில் குடிதண்ணீர் நெருக்கடி; தீர்வு பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி, பெப்.02

கிளிநொச்சி, கோணாவில் கிராம மக்கள் நீண்டகாலமாக குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட அந்தக் கிராமத்தில் நீண்டகாலமாக குடிதண்ணீர் நெருக்கடி நிலவி வருகின்றது.

கோடை காலங்களில் கிணறுகளில் நீர் வற்றுகின்ற போது மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புதுமுறிப்புக் குளத்துக்கு மக்கள் குளிக்கச் செல்கின்றனர். அந்தக் கிராமத்தை மையப்படுத்தி குடிதண்ணீர் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு கிராம மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

காந்திக் கிராமம், கோணாவில் மத்தி, இராஜன் குடியிருப்பு ஆகிய பகுதி மக்களே கூடுதலாக நீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே அந்தக் கிராமத்தில் அதிக பொதுக் கிணறுகளை அமைப்பதன் மூலமும் குடிதண்ணீர் நெருக்கடிக்கான தீர்வை வழங்கக் முடியும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-70)

# கிளிநொச்சி சமூகசேவை அலுவலகத்தில் தொழில் வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு



கிளிநொச்சி, பெப்.02

கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட வைத்திய சாலை உளநலப் பிரிவின் அனுசரணையுடனும் மாவட்டத்தில் பின் தங்கிய பிரதேசத்தில் படித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருப்போருக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

முகாமைத்துவ உதவியாளர் போட்டி பரீட்சைக்கான இலவசக் கருத்தரங்கு ஒவ்வொரு திங்கள் தோறும் பிற்பகல் கிளி மாவட்ட சமூகசேவைதிணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெறுகின்றது .

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சையை எதிர்கொள்ள இருப்போர் இந்த இலவசக் கருத்தரங்கில் பயன் கலந்து பெறமுடியும்.

மாவட்டக் கூட்டுறவு கலாசார மண்டபத்துக்கு அண்மையில் அமைந்துள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகல் 3 மணி முதல் 5 .30 மணிவரையும் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

மாணவர்களுக்கான மாதிரி உளச்சார்பு வினாத் தாள்களுடன் பரீட்சை எதிர்பார்ப்பு மாதிரி வழிகாட்டலும் வழங்கப்பட்டது.

(எ-70)

# தாயக மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் ஜேர்மன் சந்திப்பு

தாயக மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக ஜேர்மன் வெளிவிவகார அமைச்சில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை வெளியிடக் கோரியும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தாயகத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்க்கும் முகமாக ஜேர்மன் ஈழத்தமிழர் அமைப்புகளால் இந்த விடயம் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பேர்லின் நகரத்தில் உள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சில் இலங்கைக்குப் பொறுப்பான உயரதிகாரி அல்மெர்,

> கடந்த 27 ஆம் திகதி வெள் ளிக்கிழமை பேர்லின் நகரத்தில் உள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

ஜேர்மன் தமிழ் பெண்கள் அமைப்பு, தமிழ் இளையோர் அமைப்பு மற்றும் ஈழத்தமிழர் மக்கள் அவை என தமிழ் அமைப்புகள் சார்ந்த பிரதிநிதிகள் சந்திப்பை மேற்கொண்டனர்.


இந்தச் சந்திப்பில் பிரதான விடயமாக தாயகத்தில் நடைபெற்ற உணவுதவிர்ப்புப் போராட்டத்தை பற்றியும் , அத்தோடு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கவிருக்கும் வரிச்சலுகை தொடர்பாகவும் பேசப்பட்டது.

நல்லாட்சி என்று கூறப்படும் இன்றைய அரசின் காலப் பகுதியில் தொடரும் ஈழத் தமிழர் மீதான கட்டமைப்புசார் இன அழிப்பு தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் அது தொடர்பான அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவையின் ஆவணமும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பேர்ண் மாநிலத்தில் பொங்கல் கொண்டாட்டம்





தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையும், தமிழ்ப் புத்தாண்டுமான தமிழர் திருநாள் பொங்கல் விழா பேர்ண் மாநிலத்தில் மண்டபம் நிறைந்த சுவிஸ் வாழ் தமிழீழ உறவுகளுடனும், சுவிஸ் தமிழ் வர்த்தக நிறுவனங்களின் பேராதரவிலும் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றல், நிகழ்வுச் சுடர், பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சுவிஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பு மற்றும் தமிழர் இல்லம் இணைந்து நடத்திய இந்தப் பொங்கல் விழாவில் வரவேற்புரையைத் தொடர்ந்து எழுச்சி நடனங்கள், மேற்கத்தேய மற்றும் திரையிசை நடனங்கள், வீணாகானம், கரோக்கே வடிவிலான எழுச்சி, திரையிசைக் கானங்களுடன் எமது வீர வரலாற்றைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

இளம் கராத்தே கலைஞர்களின் ஆற்றுகை வெளிப்பாட்டுடன், தேர்ச்சி பெற்றவர்களுக்கான சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டதுன், காலத்திற்கேற்ப கருப்பொருளைக் கொண்ட சிறப்புரை, கவிதை, பேச்சுக்களுடன் வேறு பல நிகழ்வுகளும் அரங்கை சிறப்பித்தன. (ஐ)

# பிரித்தானியாவில் நடைபெற்ற கேணல் கிட்டுவின் நினைவேந்தல்!



கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களின் இருபத்து நான்காவது ஆண்டு நினைவெழுச்சி நாள் பிரித்தானியாவில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 29 ஆம் திகதி எழுச்சியுடன் நடைபெற்றது.

வீரகாவியமான மாவீரர்களான கேணல் கிட்டு லெப்ரினன் கேணல் குட்டிசிறி, மேஜர் வேலன் அல்லது மலரவன், கடற்புலி கப்டன் ஜீவா, கடற்புலி கப்டன் குணசீலன் அல்லது குணராஜ், கடற்புலி கப்டன் நாயகன், கடற்புலி கப்டன் றொசான், கடற்புலி லெப்ரினன் அமுதன், கடற்புலி லெப்ரினன் நல்லவன், கடற்புலி லெப்ரினன் தூயவன் ஆகிய மாவீரர்களின் நினைவு நாளில் மாவீரர்களின் திருவுருவப் படத்துக்கு கேணல் கிட்டுவின் சகோதரன் காந்தி தாசன் பொதுச் சுடரை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து, திருவுருவப் படத்துக்குக் கனகரத்தினம் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து அக வணக்கத்துடன், மலர் வணக்கம் செலுத்தினர்.

தாயகப் பாடல்கள், கவிதைகள், பேச்சுக்கள், குழு நடனம் என்பன இடம்பெற்றன. (ஐ)





# சுவிஸ் பாசல் நகரில் தமிழர் திருநாள்



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை பாசல் பழைய மாணவர் சங்கம் மற்றும் இலக்கிய வெளி உறுப்பினர்கள் இணைந்து கொண்டாடினர்.

இந்த நிகழ்வு, தமிழ் மக்களின் பண்பாட்டையும் வாழ்வியலையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. தாய் நாட்டில் கொண்டாடப்பட்ட உணர்வையும் தோற்றுவித்திருந்தது என்று புலம்பெயர் தமிழர்கள் தெரிவித்தனர்.

சிறுவர்களின் நிகழ்வுகள், நடனங்கள், வயலின் இசை, கவியரங்கம், விவாதமேடை என்பனவும் இடம்பெற்றன. (ஐ)




பொன்.வேணு கிருஷ்ணா

### ட்ரம்பின் பயணத்தடை முடிவுக்கு அமெரிக்கா முழுவதும் போராட்டங்கள்

அமெரிக்க அதிபராக இரண்டாவது வாரத்தை டொனால்ட் ட்ரம்ப் தொடங்கும் நிலையில், அவருடைய முதல் முக்கிய முடிவு குறித்து மிகப்பெரிய போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



ஏழு முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளைச் சேர்ந்த மக்கள், அமெரிக்காவுக்கு வரத் தாற்காலிகத் தடை விதித்ததை எதிர்த்து அமெரிக்க நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதில் சில பெரிய போராட்டங்கள் விமான நிலையங்களில் நடைபெற்றன.

அதிபரின் உத்தரவை எவ்வாறு அமுல்படுத்துவது என்பதில் தொடர்ந்து அங்கு குழப்பம் நிலவி வருகிறது.

ஆனால், தன்னுடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் ட்ரம்ப், அமெரிக்காவை பாதுகாப்பாக வைப்பதே இந்த நடவடிக்கைகளின் நோக்கம் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சட்டபூர்வமாக வசிக்க அனுமதி உள்ளவர்களுக்கு இந்தத் தடை உத்தரவு பொருந்தாது என்று உள்நாட்டு பாதுகாப்புத்துறை உறுதிப்படுத்தியுள்ளது.

Iraq War Vet Congressman Says He Is Ashamed Trump Is President After Muslim Ban
By Jason Easley on Fri, Jan 27th, 2017 at 6:20 pm
Rep. Seth Moulton (D-MA) reacted to Trump's Muslim ban executive order by saying that he is ashamed that Donald Trump is our president.

### அமெரிக்க விசா அமைப்பு இஸ்லாமியர்களுக்கு எதிரானதா?



அமெரிக்கா கொண்டுவந்துள்ள வரைவு நிறைவேற்று அதிகார ஆணையின் விவரங்களை பி.பி.சி அறிந்துள்ளது. இந்த வரைவு ஆணை நிறைவேறும் பட்சத்தில் அது பெரும்பாலும் இஸ்லாமிய நாடுகளில் இருந்து வரும் குடிமக்கள் அமெரிக்காவுக்குள் நுழையாதபடி செய்வதாக உள்ளது.

அமெரிக்காவில் விசாக்கள் மறுக்கப்படுகின்றமை தொடர்பான புள்ளி விவரங்களின் அடிப்படையில், அதில் இஸ்லாமியர்களுக்கு எதிரான நிலைப்பாடு ஏற்கனவே உள்ளதா என்று பார்க்கலாம்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஏழு ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வரும் குடியேறிகள் அல்லது அகதிகள் மீது குடிவரவுக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தத் திட்டமிட்டுள்ளார் என்று பி.பி.சியிடம் உள்ள அந்த வரைவு ஆணை மூலம் தெரியவருகிறது.

அமெரிக்க அதிபர், பெயர் குறிப்பிடப்படாத அந்த நாடுகளில் இருந்து வருவோருக்கு விசாக்கள் அளிப்பதை இடைநிறுத்தத் திட்டமிட்டுள்ளார் என்று அந்த எட்டுப் பக்க ஆவணம் மூலம் தெரியவந்துள்ளது. அந்த நாடுகளில் இருந்து அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஆபத்து உள்ளதாக அவர் கருதுவதாக தெரிகிறது.

அந்தப் பட்டியலில், சிரியா, ஈராக், ஈரான், லிபியா, சூடான், சோமாலியா மற்றும் ஏமன் ஆகிய இஸ்லாமியர்கள் செறிந்து வாழும் நாடுகள் இருப்பதாக தாங்கள் நம்புகின்றோம் என குடிவரவு வழக்கறிஞர்கள் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நாடுகளில் இருந்து வரும் விண்ணப்பதாரர்கள் (அதில் அகதிகளும் அடங்குவார்கள்) அமெரிக்காவிற்குள் நுழைய பெரிய அளவில் சிரமத்தைச் சந்திப்பார்கள். ஆனால் ஏற்கனவே சில நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்க விசாவைப் பெற சிக்கலை சந்திக்கின்றனர்.



### யாருக்கு விசா தேவை?

உங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அமெரிக்கா வர விசா தேவை இல்லை என்ற நிலை இருந்தாலோ அல்லது நீங்கள் அமெரிக்காவின் விசா தள்ளுபடித் திட்டத்தைப் பயன்படுத்த முடியும் என்ற நிலை இருந்தால் தவிர, நீங்கள் அமெரிக்காவுக்கு செல்வதற்கு முன்பாகவே, வேலைக்காகவோ அல்லது சுற்றுலா போன்ற காரணங்களுக்காகப் பொதுவாக பல்நோக்கு விசா (multi-purpose B visa) வேண்டி விண்ணப்பிக்க வேண்டும். இது மறுக்கப்படலாம்.

குறிப்பிடப்பட்ட அந்த ஏழு நாடுகளில் இருந்து வரும் அமெரிக்க விசா விண்ணப்பங்கள் ஏற்கனவே கட்டுப்படுத்தப்படுகின்றன. அதிக எண்ணிக்கையில் விசா மறுக்கப்படும் விகிதம் கொண்ட நாடுகள் அவை. ஆனால் இந்த நாடுகள் விசா மறுக்கப்படும் முதல் பத்து நாடுகள் பட்டியலில் இல்லை. ஆனால் சோமாலியாவும், சிரியாவும் முதல் 20 நாடுகளின் பட்டியலில் உள்ளன.

2015 இல் 35,000 க்கும் மேற்பட்ட ஈரான் நாட்டினர் அமெரிக்காவுக்கு வந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு தான் மிக சமீபத்திய விசா தொடர்பான தரவுகள் கிடைத்த ஆண்டு ஆகும்.

எந்த நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மிகவும் அடிக்கடி அமெரிக்க விசா மறுக்கப்படுகிறது? பெரும்பாலும் இஸ்லாமியர்கள் வாழும் நாடுகள் இதில் இலக்கு வைக்கப்படுகின்றனவா? 2016 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களைப் பார்க்கலாம்.

### போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள்

சமீபத்தில், மோதல்களைச் சந்திக்கும் அல்லது சந்தித்து வரும் நாடுகள் அதிக அளவில் விசா மறுப்புக்கு ஆளாகியுள்ளன.

இதில் சோமாலியா, ஈராக் மற்றும் சிரியா ஆகியவை அடங்கும். ஆனால் இந்த நாடுகளைக் காட்டிலும் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களுக்குப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விசா மறுக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து வந்த சுமார் 74 சதவீதம் விசா விண்ணப்பங்கள் 2016 இல் மறுக்கப்பட்டுள்ளன. மற்ற நாடுகளை காட்டிலும் இரண்டாவது பெரிய எண்ணிக்கையில் இந்த நாட்டில் இருந்து வரும் விசாக்கள் மறுக்கப்பட்டுள்ளன.

### அமெரிக்காவில் முஸ்லிம்கள் வரவேற்கப்படுகின்றனரா?

வரைவு ஆவணத்தில் உள்ள அனைத்து ஏழு நாடுகள் பெரும்பாலும் இஸ்லாமியர்கள் வாழும் நாடுகள் என்பது உண்மைதான். ஆனால், அதே போன்ற மற்ற நாட்டு விண்ணப்பதாரர்கள் விசா பெறுவதில் குறைவான பிரச்சினைகளே உள்ளன.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், லெபனான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்கு ஒப்பீட்டளவில் அரிதாகவே விசாக்கள் மறுக்கப்படுகின்றன. இந்த் நாடுகளை சேர்ந்தவர்கள்தான் 9/11 தாக்குதல் சம்பவத்துக்கு காரணமானவர்கள்.



வெறும் நான்கு சதவீத சவுதி நாட்டு விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே 2016இல் விசா மறுக்கப்பட்டது. 2015 இல் 1லட்சத்து 50ஆயிரம் பேருக்கு மேற்பட்ட சவுதி நாட்டினருக்கு அமெரிக்காவுக்கு சுற்றுலா செல்ல அல்லது தொழில் காரணமாக விசா அளிக்கப்பட்டது.

அமெரிக்காவின் பட்டியலில் உள்ள நாடுகளில், சவுதி அரேபியா நாட்டின் அண்டை நாடான, ஓமான் நாட்டினரின் விண்ணப்பங்கள், மிகக் குறைந்த அளவிலேயே நிராகரிக்கப்படுகின்றன. சுமார் 2 சதவீதத்துக்கும் குறைவான ஓமான் நாட்டு விண்ணப்பங்களே நிராகரிக்கப்பட்டுள்ளன. ஒப்பிட்டுப் பார்க்கையில், இந்த எண்ணிக்கையை விட, 2016 இல் விசா நிராகரிக்கப்பட்ட இஸ்ரேலியர்களின் சதவீதம் இரு மடங்குக்கு அதிகமாகவே உள்ளது.

### விசா மறுத்தல்களில் வேறுபாடுகள் ஏன்?

ஏன் வெறும் 15 சதவீதம் அஸர்பைஜான் நாட்டை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் (பெரும்பான்மை இஸ்லாமியர்கள் வாழும் நாடு) நிராகரிக்கப்பட்டுள்ளனர்? அதோடு ஒப்பிட்டால், அதன் அண்டை நாடான ஜார்ஜியா நாட்டை சேர்ந்த 57 சதவீத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன? ஜோர்ஜியா பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் வாழும் நாடு.

அமெரிக்க அரசின் தூதரக விவகார துறைப் பணியகத்தின் செய்தி தொடர்பாளர் வில் காக்ஸ்ஸிடம் பி.பி.சி செய்தியாளர் பேசினார்.


விசா நிராகரிப்பு விகிதங்கள் தனிப்பட்ட நாடுகளைக் கொண்டு அமைக்கப்படுவதில்லை. அனைத்து விண்ணப்பங்களும் விண்ணப்பிக்கும் தனிநபரைப் பொறுத்துதான் முடிவு செய்யப்படும் என காக்ஸ் தெரிவித்தார்.

சில நாடுகளில் விசா அதிகாரிகள் மற்ற நாடுகளில் இருக்கும் விசா அதிகாரிகளை விடக் கடுமையாக நடப்பதற்கான வாய்ப்பு உள்ளதா என்று கேட்டபோது, காக்ஸ் இதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என்றார்.

அனைத்து விசா அளிக்கும் அதிகாரிகளுக்கும் ஒரேதரமான பயிற்சிதான் அளிக்கப்படுகிறது, அனைவருக்கும் ஒரே விதமான வசதிகள்தான் அளிக்கப்படுகின்றன. மேலும், சட்டரீதியாக சரிபார்க்கக்கூடிய அளவுகோல்கள் இருக்கின்றன.- என்றார்.

தனிப்பட்ட முறையிலான புள்ளி விவரங்கள் குறித்துத் தான் கருத்து தெரிவிக்க முடியாது என்று தெரிவித்த அவர், விசா அளிப்பதா, வேண்டாமா என்ற முடிவை எடுக்க அதிகாரிகள் பயன்படுத்தும் தகுதிகாண் அம்சங்களை வைத்து, முடிவின் அடிப்படையை அறியலாம் என்று கூறினார்.

(கேள்வி தொடரும்...)



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.






# தமிழ்த் தேசிய எழுச்சி

45

## இந்திய – இலங்கை ஒப்பந்தம்

இலங்கையின் ஆகாய வெளியை அத்துமீறிய இந்தியாவின் கண்டிப்பான போக்கும், நெல்லியடியில் விடுதலைப் புலிகள் நிகழ்த்திய கோரமான தாக்குதலும் ஜெயவர்த்தனாவையும் அவரது இன வெறி கொண்ட அமைச்சர்களையும் பணிய வைத்தது. இந்திய மத்தியஸ்துவ முயற்சிக்கு சிறிலங்கா அரசு இணக்கம் தெரிவித்தது.இதனைத் தொடர்ந்து புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் சுறுசுறுப்பான இராஜதந்திர நகர்வுகள் இடம்பெற்றன. தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஓர் அதிகாரப் பரவலாக்கத் திட்டம் உட்பட இரு நாடுகளின் உறவுகளை வலுப்படுத்தும் வகையில் ஒப்பந்தம் ஒன்றை வரையவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட பின்னணி நிகழ்வுகளை டிக்சிட் 'கொழும்பில் எனது பணி' என்ற தனது நூலில் நாற்பது பக்கங்களைக் கொண்ட ஓர் அத்தியாயத்தில் விவரமாக விளக்கினார்.

ஒப்பந்தம் உருப்பெற்றதன் மூலக் கதையை விவரித்துச் சொல்லும் டிக்சிட், விடுதலைப் புலிகள் சம்பந்தமான ஒரு விசித்திர நிகழ்வையும் சொல்கிறார். சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டு செயற்பட்ட புலிகளின் பிரதிநிதி ஒருவர், இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அதனை 'இந்து' பத்திரிகை ஆசிரியரான ராம் அவர்களுக்குத் தெரியப்படுத்தினாராம். இத் தீர்வுத்திட்டம் ஆறு அம்சங்களைக் கொண்டதாக டிக்சிட் எழுதுகிறார்.

(1) சிறிலங்கா இராணுவம் தனது படை நடவடிக்கைகளை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

(2) தமிழ்த் தாயகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும்.

(3) 1983-86 கால இடைவெளிக்குள் பேசப்பட்ட தீர்வு யோசனைகளின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும்.

(4) தமிழ்மொழி தேசிய மொழியாகவும், உத்தியோக மொழியாகவும் ஏற்கப்படவேண்டும்.

(5) இறுதித் தீர்வுக்கு முன்னராக ஓர் இடைக்காலத் தீர்வு செயற்படுத்தப்படவேண்டும்.

(6) இன விகிதாசாரத்தின் அடிப்படையில் சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பில் தமிழர்களுக்கு இடம் அளிக்கப்பட வேண்டும். இந்த ஆறம்ச யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போருக்கு நிரந்தர ஓய்வு கொடுத்துத் தமிழீழ தனியரசுக் கோரிக்கையையும் கைவிடும் என ராமுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாம். இந்த யோசனைகள் உள்ளடங்கியதாகத் தயாரிக்கப்படும் ஒப்பந்தத்தில் தமிழர்கள் சார்பாக இந்திய - இலங்கை அரசுகள் கைச்சாத்திட வேண்டும் எனவும் புலிகளின் சிங்கப்பூர் பிரதிநிதி ராமுக்குத் தெரிவித்தாராம். சீனாவுக்கு விஜயம் செய்த பின்பு சிங்கப்பூரில் தங்கி நிற்கும் பொழுது, தொலைபேசி மூலமாக ராமுக்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டது என டிக்சிட் எழுதுகிறார். புலிகளின் பிரதிநிதிகள் மூலம் தனக்குக் கிடைத்த செய்தியை, காமினி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் தனது நண்பருமான காமினி திசநாயக்கா வாயிலாக சிறிலங்கா அரசுக்குத் தெரியப்படுத்தினாராம் இந்துப் பத்திரிகை ஆசிரியர். இப்படியான ஒரு விசித்திரமான கட்டுக்கதை டிக்சிட்டின் நூலில் தரப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் சிங்கப்பூர் பிரதிநிதியால் ராமுக்குத் தெரிவிக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையிலே இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கான வரைவு தயாரிக்கப்பட்டது என எழுதுகிறார். இதில் சர்ச்சைக்குரிய கேள்வி என்னவென்றால், விடுதலைப் புலிகள் இயக்கம் இப்படியான யோசனைகளை அல்லது கோரிக்கைகளை இந்துப் பத்திரிகை ஆசிரியர் மூலம் இலங்கை அரசிடம் சமர்ப்பித்தார்களா என்பதுதான். அதுவும் பெயர் குறிப்பிடப்படாத மர்மமான நபர் ஒருவர், புலிகளின் சிங்கப்பூர் பிரதிநிதி என உரிமைகோரி, அரசியல் தீர்வு யோசனைகளைத் தொலைபேசியில் தெரிவித்தார் என்ற இந்த கட்டுக்கதைக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் இலட்சியத்தையும், ஒட்டுமொத்தத்தில் தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் இந்த புனைகதையை யார் புனைந்தார்களோ தெரியவில்லை. எனினும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் உருவாக்கத்துக்கு விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்தி, நியாயப்படுத்தும் நோக்குடன் இந்த விபரீதமான சம்பவம் சோடிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் எவ்விதமான உண்மையும் இல்லை என்பதையும், இத்தகவல் பரிமாற்றத்துக்கும் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதையும் நான் உறுதிபடக் கூறுவேன். 'இந்து' ஆசிரியர் ராம், இந்தியத் தூதுவர் டிக்சிட், சிங்கள அமைச்சர் காமினி ஆகியோரும் 'றோ' புலனாய்வுத்துறையினரும் சேர்ந்து திரித்த கட்டுக்கதை என்றே இதை நான் கருதுகிறேன். இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு விடுதலைப் புலிகளின் இந்த யோசனைகளே அடிப்படையாக அமைந்திருந்தமையால் பிரபாகரனும் நானும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்த பொழுது இந்த விடயம் பற்றி அவர் எதுவுமே பேசவில்லையே? ராமும் டிக்சிட்டும் அனுபவ முதிர்ச்சி பெற்ற புத்திஜீவிகள் என்பதால், விடுதலைப் புலிகளின் சிங்கப்பூர் பிரதிநிதி என உரிமைகோரி யாரோ இனம் தெரியாத நபர் இனப்பிரச்சினைக்கு ஒரு யோசனைத் திட்டத்தைத் தொலைபேசியில் தெரிவித்த போது, அதன் நம்பகத் தன்மை பற்றி புலிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கத் தவறியமை ஏன்? அடுத்த முக்கியமான விடயம் என்னவென்றால், விடுதலைப் புலிகளின் அரசியல் இலட்சியத்துக்கும் கொள்கைக்கும் மாறுபட்டனவாக இந்த யோசனைகள் அமையப்பெற்று இருக்கின்றமையை எவரும் இலகுவில் கண்டுகொள்ளலாம். குறிப்பாக, புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படைக் கோரிக்கைகள் எதுவுமே இந்த யோசனைத் திட்டத்தில் அடங்கவில்லை. இவற்றிலிருந்து ஓர் உண்மை புலனாகும். அதாவது, இந்த சிங்கப்பூர் நாடகம் ஒரு கட்டுக்கதையன்றி வேறொன்றும் அல்ல என்பதுதான். இந்திய இலங்கை அரசுகளின் கூட்டு முயற்சியாகவே இந்திய- இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. ராஜீவ் அரசினதும் ஜெயவர்த்தனாவின் ஆட்சிப்பீடத்தினதும் பிரதிநிதிகள் கூடிக் கலந்தாலோசித்து இந்த ஒப்பந்தத்தைத் தயாரித்தனர். இந்த ஒப்பந்தத்தின் உருவாக்கத்தில் தமிழ் மக்களோ அன்றிச் சிங்கள மக்களோ சம்பந்தப்படவில்லை. இந்திய நாடாளுமன்றத்திலோ அன்றி இலங்கை நாடாளு மன்றத்திலோ இந்த விடயம் விவாதிக் கப்படவில்லை. தமிழ் மக்களின் தலைவிதியைப் பாதித்த இந்த ஒப்பந்தம் எவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அறிமுகம் செய்யப்பட்டது என்பது ஒரு விசித்திரமான கதை.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் நாள், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் முதற்செயலாளராக (அரசியல்) பணி ஆற்றிய ஹர்தீப்பூரி, யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளின் தலைவரை அவசரமாகச் சந்திக்க வேண்டுமென வற்புறுத்தினார். தனக்கு உதவியாக யோகரெத்தினம் யோகியை அழைத்துச் சென்ற பிரபாகரன், இந்தியத் தூதரக அதிகாரியைச் சந்தித்தார். இந்திய - இலங்கை அரசுகள் இணைந்து, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டம் தயாரித்துள்ளன எனத் தெரிவித்த பூரி, இந்தத் திட்டத்தைத் தெளிவாக விளக்குவதற்காக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லியில் பிரபாகரனைச் சந்திக்க விரும்புகிறார் எனவும் கூறினார். இந்தத் தீர்வுத் திட்டம் பற்றி தெளிவாகக் கூறுமாறு பிரபாகரனும் யோகியும் கேட்டுக்கொண்டனர். அதன்போது, இதுபற்றி விரிவாகக் கூற மறுத்த இந்திய இராஜதந்திரி, புதுடில்லியில் அதன் உள்ளடக்கம் விரிவாக விளக்கப்படும் என்றார். தமிழீழ மக்களின் அரசியல் வாழ்வைப் பாதிக்கும் ஒரு முக்கியமான தீர்வுத்திட்டத்தை இரு அரசுகளும் இணைந்து தயாரித்துள்ளமையால் அதனை உதாசீனம் செய்யமுடியாது என பிரபாகரன் கருதினார். அழைப்பு விடும் பொழுது அதனைத் தட்டிக்கழிக்கவும் அவரால் முடியவில்லை. ஆகவே, புதுடில்லி செல்வதற்குப் பிரபாகரன் இணங்கினார். அவ்வேளை சென்னையில் தங்கியிருந்த என்னையும் தன்னுடன் புதுடில்லிக்கு அழைத்துச் செல்ல வேண்டுமெனவும் பிரபாகரன் வலியுறுத்தினார்.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள், யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோவில் வளாகத்தில் தரையிறங்கிய இரு இந்திய விமானப் படையின் உலங்குவானூர்திகள், பிரபாகரன், யோகரெத்தினம் யோகி, திலீபன் ஆகியோர் அடங்கிய விடுதலைப் புலிகளின் தூதுக் குழுவை ஏற்றிக் கொண்டு சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டன. அவ்வேளை சென்னையில் என்னைச் சந்தித்த தமிழ்நாட்டுக் காவல்துறை அதிகாரிகள், பிரபாகரனது வருகையையும் அவரது வேண்டுகோளையும் எனக்குத் தெரிவித்தனர். நான் உடனடியாகவே மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குப் புறப்பட்டுச் சென்றேன். அங்கு பிரபாகரனைச் சந்தித்த பொழுது, இந்தியப் பிரதமரின் அழைப்பின் பேரில் புதுடில்லி தான் செல்லவுள்ளார் எனச் சொன்னார். இந்திய இலங்கை அரசுகள் கூட்டாகச் சேர்ந்து தமிழர் பிரச்சினை தொடர்பாக ஒரு தீர்வுத் திட்டம் வைத்திருப்பதாகவும் அதன் விவரங்கள் எதுவுமே தனக்குத் தெரியாது என்றும் அவர் சொன்னார். விமான நிலையத்தில் வைத்து பூரியைச் சந்தித்த நான், அவரிடம் அத்தீர்வுத் திட்டத் தின் உள்ளடக்கம் பற்றி விசாரித்தேன். அதுபற்றி எதுவுமே கூற அவர் மறுத்து விட்டார். புதுடில்லியில் இந்தியத் தூது வர் டிக்சிட் எம்மைச் சந்தித்து விவர மாக எல்லாவற்றையும் விளக்குவார் என அவர் உறுதியளித்தார். பூரியின் முகபாவத்திலிருந்தும், மனம் திறந்து கதைப்பதற்கு அவர் தயங்குவதிலிருந் தும் எனக்கு உள்ளூர ஒரு சந்தேகம். எதையோ ஒளித்து மறைத்து எம்மை ஏமாற்றி புதுடில்லிக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்பது மட்டும் புலனாகியது. சிறிது நேரத்தில் இந்திய வான் படையின் விமானம் மூலம் புதுடில்லி வந்தடைந்தோம்.

(தொடரும்...)



# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் பெப்.7 இல் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, பெப்.02

சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு சுற்றறிக்கை வெளியிடப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுள்ள 14 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

அகில இலங்கை பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக் குழு நேற்று முன்தினம் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தப் போராட்டத்தை அடுத்து முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான தீர்மானங்களை எடுக்க எதிர்வரும் 12 ஆம் திகதி மீண்டும் கூடுவதாகவும் அந்தக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் முதல் மேலதிகக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதாக உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வாக்குறுதியளித்திருந்தார் ஆயினும் அது வழங்கப்படவில்லை என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முன்னெடுக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையின் போது அரசு இந்த வாக்குறுதியைத் தொழிற்சங்கங்களிடம் வழங்கியிருந்ததாகவும் அந்தச்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (எ)

# வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்போரை கைது செய்யுங்கள்

## நீர்வளத்துறை அமைச்சர் பாதுகாப்புப் பிரிவினருக்குப் பணிப்புரை

கொழும்பு, பெப்.02

மீன்பிடி நடவடிக்கைகளின் போது வெடிபொருள்களைப் பயன்படுத்தும் மீனவர்களைக் கைது செய்யுமாறு கடற்றொழில் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர பாதுகாப்புப் பிரிவினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் வெடிபொருள்களை விற்பனை செய்வோரைக் கைது செய்யுமாறு அமைச்சர் இதன் போது பாதுகாப்புப் படையினரிடம் கேட்டுள்ளார்.

மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக அதிகளவில் வெடிபொருள்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் கடற்றொழில் அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

டைனமைட் போன்ற வெடிபொருள்களைப் பயன் படுத்தி மீன்பிடிக்க வேண்டாம் என்று மீனவர்களுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சிலமீனவர்களின்இவ்வாறான செயற்பாடுகளால் மீன் வளம் அழிவுக்குள்ளாகும் அச்சுறுத்தலை எதிர்நோக் கியிருக்கிறது. இதனால் இலங்கையின் கடற்பரப்பில் மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட் டிக் காட்டினார்.



வெடிபொருள்களைப் பயன்படுத்திப் பிடிக்கப்படும் மீன்களைச் சந்தைக்கு அனுப்ப வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்குத்தாம் பணிப்புரை வழங்கியிருக்கிறார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

# தினசரி ராசி பலன் 02.02.2017

துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு தைத்திங்கள் 20ம் நாள் சஷ்டி பி.இ.12.42 வரை. பின் ஸப்தமி. ரேவதி இரவு 9.11 வரை. பின்அசுவினி. சித்தாமிர் யோகம் முழுவதும் ராகுகாலம்: பகல் 1.51 முதல் 3.19 வரை. சுபநேரம்: காலை 8.03 முதல் 9.32 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: தைமாத வளர்பிறை ஷஷ்டி.

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று கவலையான நாள். குடும்பத்தில் கருத்து மோதல் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். விவசாயத்தில் பயிர்கள் அழிந்து சேதமடையும்.

**ரிஷபம்:** இன்று உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் வளமடையும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம், பதவிஉயர்வு என்பன கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று விருத்தியான நாள். தொழில் கஷ்டங்கள் நீங்கும். உத்தியோக மேன்மை உண்டாகும். தொழிலாளர்கள், முதலாளிமாரின் உறவு புலப்படும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் உண்டாகும்

**கடகம்** : இன்று யோகமான நாள். எண்ணியவை ஈடேறும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரம் துரித வளர்ச்சி அடையும்.

**சிம்மம்** : இன்று சஞ்சலமான நாள். மனம் பதற்றமுடன் காணப்படும். பொருளாதாரம் நலிவடையும். தொழிலில் நிறையப் பாடுபட வேண்டியிருக்கும். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும்.

**கன்னி:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அதிகமாகும். எண்ணிய காரியம் தடை, தாமதம் ஆகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்கவும்.

**துலாம்:** இன்று உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்கள் பல சலுகைகளை அனுபவிப்பார்கள். சிலருக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைத்து, வெளியூரில் பணியாற்றும் நிலை ஏற்படும்.

**விருச்சிகம்:** இன்று நன்மையான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமடையும். சிலருக்கு அலுவலகத்தில் பொறுப்பும், அதிகாரமும், சம்பள உயர்வுடன் பதவி உயர்வும் கிடைக்கும்.

**தனுசு:** இன்று சலனம் மிகுந்த நாள். மனம் சஞ்சலம் அடையும். அலுவலகப் பொறுப்புகள் அதிகமாகும். உயர் அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். நம்பியவர்களும் மோசம் செய்வார்கள். எதிலும் அவதானம் தேவை.

**மகரம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. செலவினங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலையில் அதிக கவனம் செலுத்தினாலும். தவறுகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கும்பம்:** இன்று மேன்மையான நாள். உறவினரின் வீட்டு விருந்துகளிலும், விழாக்களிலும் கலந்து கொள்ள நேரும். தடைப்பட்ட திருமணம் சிறப்பாக நடைபெறும்.

**மீனம்:** இன்று மகிழ்ச்சியான நாள். சிலருக்கு புதிய வீடு குடிபோகும் சூழ்நிலை உருவாகும். வெளிநாட்டுத் தொழில் முயற்சி வெற்றியைத் தரும். திருமணகாரியம் மனம் போல் ஈடேறும்.

சந்திராட்டமநாள்: மகம், பூரம், உத்தரம் 1ம் கால் ஆகிய நட்சத்திரங்களில் ஜனனமானோர் நற்கருமங்கள் செய்வதை இந்நாளில் தவிர்க்க வேண்டும்.

# மருந்துக்குக் கஞ்சா உற்பத்தி இராணுவத்தினர் மூலமாகவாம்!

மருந்துக்காகப் பயன்படுத்தும் நோக்குடன் கஞ்சாவை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைக்கு மகாசங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள் எனத் தாங்கள் கருதுவதால் அதனை விரைவில் மேற்கொள்ளவுள்ளோம் என்றும் அமைச்சர் கூறினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்குத் தேவையான தேசிய மருந்து வகைகள் சில இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என சுட்டிக்காட்டிய அமைச்சர் ராஜித, அவற்றில் அபினும் ஒன்று எனவும், கஞ்சாவை உற்பத்தி செய்யும் யோசனையை அண்மையில் தான் முன்வைத்திருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் இராணுவத்தினரைக் கொண்டு கஞ்சாவை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். கஞ்சாவைப் போதைப் பொருளாகப் பயன்படுத்தினால்தான் பிரச்சினை. மருந்தாகப் பயன்படுத்தினால் எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் கூறினார். (ஒ)

# கரு ஜயசூரியவுக்கு ஜப்பான் பேரரசரால் உதய சூரியன் விருது!



கொழும்பு, பெப்.02

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு ஜப்பான் பேரரசரால் உதய சூரியன் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பான் பேரரசர் மாளிகையில் அக்கிஹிதோ பேரரசரால் இந்த விருதை வழங்குவதற்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், மகளின் மரணத்தால் அந்த நிகழ்வில் சபாநாயகருக்கு அவ்வேளை கலந்து கொள்ள முடியவில்லை.

அதன்பிரகாரம் அந்த விருதை வழங்குவதற்கான நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்தில் நடைபெற்றது.

இலங்கை பிரஜை ஒருவருக்கு முதன் முதலாக உதய சூரியன் விருது கிடைத்துள்ளமை இதுவே முதல் தடவையாகும். (எ)

# அனுராதபுரம், சிகிரியா பகுதிகளிலுள்ள புகையிலை களஞ்சியங்கள் மூடப்படும்

## புகையிலைப் பேரவை தீர்மானம்

அனுராதபுரம் மற்றும் சிகிரியா பகுதிகளில் காணப்படுகின்ற 2 புகையிலை களஞ்சியசாலைகளை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக, இலங்கை புகையிலைப்பேரவை, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

புகையிலை, சிகரெட் பாவனையால் இரத்தச்சோகை ஏற்படுகின்றது. அதனால், இதனைத் தடுக்கும் முகமாக, 4புகை யிலைக் கிடங்குகளை மூடுவதற்கு, 2016 இல் இலங்கை புகையிலைப் பேரவை தீர்மானித் திருந்தது.

அதன் முதற்கட்ட மாகவே, அனுராதபுரம், சிகிரியா ஆகிய பிரதேசங்களிலுள்ள புகையிலைக் கிடங்குகளை மூடுவதாக அந்தப் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இதனால் சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்களது வாழ்வாதாரத்தை இழக்க நேரிடுவதாகத் தெரியவருகிறது. புகையிலையால் ஆண்டு வருமானம் 200 மில்லியன் ஆகும். (எ)

# நீதிமன்றங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு இன்று நியமனம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, பெப்.02

நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு புதிதாக 180 பேரை நியமிக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கான நியமனம் இன்று நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாகாண நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் முதலான அனைத்து நீதிமன்றங்களிலுமுள்ள வெற்றிடங்களைக் கருத்திற் கொண்டே இந்த பணியாளர்கள் நியமனங்கள் இடம்பெறவுள்ளன என்றும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சால் கடந்த காலங்களில் ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள நீதிவான் நீதிமன்றங்கள், மேல் நீதிமன்றங்கள், மாகாண நீதி மன்றங்கள் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான கட்டடங்களை நிர்மாணித்தல், காரியாலய உபகரணங்கள் என்பவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆயிரத்து 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கணினி மயப்படுத்தி ஆவணங்களைக் களஞ்சியப்படுத்திப் பாதுகாக்க விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் நீதி அமைச்சு கூறியுள்ளது. (எ)

# கடற்றொழிலாளர்களின் பாதிப்பு ஏனைய தரப்பினரையும் தாக்கும்!

## உதவி வழங்கும் நிகழ்வில் விந்தன்

யாழ்ப்பாணம்,பெப்.02

கடல்தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்பைத் தனியே கடல்தொழிலாளர்களின் பிரச்சினை என்று மட்டுப்படுத்தி விடமுடியாது. அது, சகல மக்களையும் பாதிக்கும் ஒரு பிரச்சினை ஆகும்.

- இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

தொழில் உபகரணம் இன்மை காரணமாகத் தொழிலின்றி உதவிகளுக்காகக் காத்திருக்கும் 50 கடல்தொழிலாளர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கடல்தொழில் உபகரணங்களை வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் வழங்கினார்.

உறுப்பினர்களுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 5 லட்சம் ரூபா ஒதுக்கி இந்த உபகரணங்களை மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை, எழுவைதீவு, அனலைதீவு போன்ற பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர் வழங்கினார்.





வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சில் கடந்த வாரம் நடைபெற்ற இந்த நிகழ்வில் பயனாளிகள் மத்தியில் உரையாற்றும் போதே மேலும் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடல்தொழிலாளர்கள் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில் கடல்தொழிலாளர்களுக்கு அதிக பங்குள்ளது.

எனினும், துரதிஷ்டவசமாக யுத்தத்தால் கடல்தொழிலாளர்கள் தங்களைக் காப்பாற்ற முடியாதவர்களாக உள்ளனர். இதனால் வடக்கு மாகாண பொருளாதாரத்துக்கு அதிகளவில் தம் பங்களிப்பை வழங்குவதில் இருந்து கடல்தொழிலாளர்கள் தடுக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் கடல்தொழில், பலதரப்பட்ட இராணுவக் கெடுபிடிகளால் எம் மண்ணில் அழிக்கப்பட்டது. தொழிலுக்குச் சென்றால் அங்கிருந்து உயிருடன் திரும்பி வரமுடியுமா என்ற ஏக்கத்துடனேயே கடல் தொழிலில் மக்கள் ஈடுபட்டனர். பல கடல்தொழில் துறைமுகங்கள் மற்றும் கரையோரங்களும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தன.

இன்றும் இலங்கையில் இருக்கக் கூடிய இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றான மயிலிட்டித்துறைமுகம் உயர் பாதுகாப்பு வலயமாகவே உள்ளது. இவ்வாறான அச்சுறுத்தல்களின் காரணமாக எனக்குத் தெரிந்த வரையில் பல கடல்தொழிலாளர்கள் தொழிலை விட்டு வேறு தொழில்களுக்குப் பெயர்ந்து விட்டனர்.

இன்றும் வடக்கில் ஆழ்கடல் மீன்பிடிக்கான வசதிகள் கடல்தொழிலாளர்களின் தேவைக்கேற்ப வந்தடையவில்லை.

எம் மீது தொடுக்கப்பட்ட கொடிய போரின் விளைவுகளாக நாங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளோம் - என்றார். (ஐ)

# ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் பதிவுகளைப் பேண வேண்டும்

## கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வலியுறுத்து



யாழ்ப்பாணம், பெப்.02

ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் பதிவுகளை அழிந்து போக விடாது பேணிப் பாதுகாக்க வேண்டியமை எம் ஒவ்வொருவரதும் கடமை.

-இவ்வாறு தெரிவித்தார் யாழ். தமிழ்ச்சங்கத்தின் தலைவர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்.

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் பெரியார் சி.வை.தாமோதரம்பிள்ளையின் நினைவுப் பதிவுகளை மீள்பார்வை செய்யும் நிகழ்வும், நினைவுப் பேருரையும், பரிசில் வழங்கும் நிகழ்வும் யாழ். நாவலர் மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்குத் தலைமையேற்றுத் தலைமை உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் பதிவுகள் பேணப்பட வேண்டும். அதேபோல் ஏனைய அறிஞர்களின் நினைவுப்பதிவுகளும் பேணப்பட வேண்டும். 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் இருந்த சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், சோமசுந்தரம்பிள்ளை போன்றவர்களின் நினைவுப் பதிவுகளை மீளாய்வு செய்ய வேண்டியமை ஈழத்தமிழர்களாகிய எமது கடமை. அந்தக் கடமையில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஆர்வம் கொண்டுள்ளது.

இந்தச் சங்கத்துக்கு இப்பொழுதுதான் ஐந்து வயதாகிறது. சங்கம் இயங்க ஓர் இடமில்லை. இலக்கம் 90, வைரவர் கோவில் ஒழுங்கை, கோண்டாவில் என்ற முகவரியில் எனதில்லத்தில் தான் இயங்குகிறது.

நமது மூத்த தமிழ் அறிஞர்களது வழிகாட்டுதல்கள், பன்முக ஆளுமைத்தன்மை, தமிழ் பணி என்பன காலம் காலமாகப் பேசப்பட்ட பொழுதும் அவரது சேவைப்பணியும் ஆய்வு நீதியாக அணுகப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த நினைவுப்பதிவு ஒரு மீள்நோக்கு என்றே குறிப்பிட்டுள்ளோம். கால ஓட்டத்தில் ஈழத் தமிழறிஞர்கள் தொடர்பான கண்ணோட்டத்தில் ஒரு தொய்வு ஏற்பட்டுள்ளது.

சி.வை. அவர்கள் நாலு மாதம் மட்டும் கற்று தனது பட்டப்படிப்பை முடித்தவர் என்ற பெருமைக்குரியவர். தனது 32 ஆவது வயதில் பட்டம் பெற்றார். சட்டப் பட்டமும் பெற்றுக்கொண்டார். பின் இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழ்த் தொண்டு செய்தவர்.

தமது கல்லூரிக் கல்வியை யாழ். மத்திய கல்லூரியில் தொடர்ந்தார். பேர்சிவெல் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றவர். நாவலரும், சி.வை. தாமோதரம்பிள்ளையும் வயது வித்தியாசம் இருந்த பொழுதும் சமகாலத்தவர்கள்.

நாவலர் காலமான பொழுது தனது இரங்கலுரையில் அவர் கூறியவை ''நல்லை ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்; சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே...'' என்ற வெண்பா வரிகள் அவர்களிடையே உள்ள உறவைச் சுட்டித்து நிற்கிறது.

அவர்களது ஆய்வுக் கட்டுரைகள் ஜப்பானில் நான் கலாநிதிப் பட்டம் பெறுவதற்கு உதவின. இவை பேணப்பட்டால் எமது சந்ததியினருக்கும் உதவும்.- என்றார். (ஐ-20)





யாழ்.நீரிழிவு கழகத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியில் நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வும் மருத்துவ முகாமும் நடைபெற்றன. இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஜெசிதரன் கலந்து கொண்டு நீரிழிவு விழிப்பூட்டல் விரிவுரைகளை நிகழ்த்தினார்.

## போதை மாத்திரை விற்ற 2 பேர் கைது!

கொழும்பு, பெப்.02

சட்டவிரோதமான முறையில் போதைமருந்து விநியோகத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவர் உள்ளிட்ட இரண்டு பேர் நீர்கொழும்பு வெள்ள வீதிய பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படைப் பிரிவின் தலைமையக முகாமின் செயற்பாட்டுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பல்வேறு வகையான சுமார் 450 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைக்காக நீர்கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# ஏறுதழுவுதல் அவசர சட்டத்துக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது

## உச்ச நீதிமன்றம் அதிரடி



டில்லி, பெப்.02

தமிழக அரசு கொண்டு வந்துள்ள ஏறுதழுவுதல் விசேட சட்டத்துக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடைபெறுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.


மேலும் ஏறுதழுவுதல் அவசர சட்டத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் அனைத்தையும் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன என்று தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம் அவசர சட்டத்துக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள மனுக்களுக்கு தமிழக அரசு 6 வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி 8 நாள்களாக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மேற்கொண்ட புரட்சியால் தமிழக அரசு ஏறுதழுவுதல் அவசர சட்டத்தைச் சட்டசபையில் நிறைவேற்றியிருந்தது. இதற்கு எதிராக விலங்குகள் நல அமைப்பு மற்றும் விலங்குகள் நல வாரியம் உள்ளிட்டவை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தன.

இதனையடுத்து அனைத்து மனுக்கள் மீதும் கடந்த 31 ஆம் திகதி விசாரணை நடத்த உள்ளதாக உச்சநீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்தச் சட்டத்துக்கு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை வழக்கு விசாரணைக்கு வந்தது. இதன் போது ஏறுதழுவுதல் அவசர சட்டத்தை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று விலங்குகள் நல வாரியத்திடம் கேள்வி எழுப்பிய நீதி மன்றம் ஏறுதழுவுதல் அவசர சட்டத்துக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளது. (எ)

# கழிவறையைப் பயன்படுத்தினால் 2,500 ரூபா ஊக்கத் தொகை !



ராஜஸ்தான், பெப்.02

இந்தியாவை தூய்மைப் படுத்தும் 'ஸ்வச் பாரத்' திட்டத்தின் மூலம், ராஜஸ்தான் மாநிலத்தில் கழிவறையைப் பயன்படுத்தினால் 2 ஆயிரத்து 500 ரூபா மாததந்தம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அனைத்துத் தரப்பினரும் சுத்தத்தைப் பேணும் விதமாக 'ஸ்வச் பாரத்' என்ற திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருந்தது. மத்திய அரசின் இந்தத் திட்டத்தை ஊக்கப்படுத்த, மாநில அரசுகளும் நிதி ஒதுக்கீடு செய்து பல திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றன.

இந்தநிலையில், ராஜஸ்தான் மாநிலத்தில் கழிவறையைப் பயன் படுத்தினால் 2 ஆயிரத்து 500 ரூபா மாத ஊக்கத் தொகையாக தரப்படும் என்று அந்த மாநிலத்தில் மாவட்ட ஆட்சியாளர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வீட்டில் கழிவறை இல்லாதவர்கள் கிராமத்தில் கட்டப் பட்டுள்ள கழிவறைகளை பயன் படுத்திக் கொள்ள ஊக்கப்படுத்தும் விதத்தில் இந்தத் திட்டம் நடை முறைப் படுத்தப்படுகிறது.

ஊக்கத் தொகை பெறுபவர்கள் முறையாகக் கழிவறையைப் பயன்டுத்துகிறார்களா என்பதைக் கண்டறியவும் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

அத்துடன் திட்டத்தின் முதல் கட்டமாக, இரு கிராமப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் குடும்பத்தினர் இந்தத் திட்டத்தால் பயன் பெறுவார்கள் என்று அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது. (எ)

# பஞ்சாப்பில் கார்க் குண்டுவெடிப்பு; மூவர் உயிரிழப்பு; 15 பேர் காயம்!

பஞ்சாப், பெப்.02

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் மாலை நிகழ்ந்த கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர்; 15 பேர் காயமடைந்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தின் பதின்டா என்ற நகரில் காங்கிரஸ் பிரசாரக் கூட்டம் நடைபெற்ற இடத்தின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாருதிக் காரில் இருந்து குண்டு வெடித்தது என்றும் அதன் போது அருகில் நின்ற சிறுவன் ஒருவன் உட்பட மூவர் உயிரிழந்தனர்; 15 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, பஞ்சாபில் நாளை மறுதினம் சனிக்கிழமை சட்ட சபைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# நாடாளுமன்றில் மயங்கி வீழ்ந்த கேரளா எம்.பி. சாவு

நாடாளுமன்றத்தில் மயங்கி விழுந்த கேரள நாடாளுமன்ற உறுப்பினர் அகமது நேற்று அதிகாலை மாரடைப்புக் காரணமாக மருத்துவமனையில் உயிரிழந்தார்.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமாகியது. இதையொட்டி இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உரையாற்றினார். இந்தநிலையில் ஜனாதிபதி உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.அகமது, திடீரென மயங்கி விழுந்தார். அதையடுத்து அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அவர் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தநிலையில் அகமது நேற்று அதிகாலை மரணமடைந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (எ)

# பிரபல நடிகர் லாரன்ஸ் அரசியலில் குதிக்கத் தயார்!



சென்னை, பெப்.02

பிரபல திரைப்பட நடிகரான ராகவா லாரன்ஸ் தேவைப்பட்டால் அரசியலில் குதிக்கத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடத்த வேண்டும் என்று இளைஞர்கள் உட்பட முக்கிய பிரபலங்கள் பலரும் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர். அதில் திரைப் பிரபலங்கள் பலரும் பங்கேற்றனர்.

திரைப் பிரபலங்கள் பலர் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றி இருந்தனர் என்ற போதும் பெரிதும் பேசப்பட்ட நடிகர் ராகவா லாரான்ஸ் தான்.

ஏறுதழுவுதல் போராட்டத்தின் போது போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு உதவும் விதமாக ஒரு கோடி ரூபாவைத் தான் தருவேன் என அவர் கூறினார். அதனால் மக்கள் மனதில் ஒரு பெருமதிப்பையும் அவர் பெற்றார்.

இந்தநிலையில் தேவைப் பட்டால் அரசியலுக்கு வரவும் நான் தயாராக உள்ளேன். என்னுடன் இருக்கும் மாணவர்கள் இதுவரை எந்தக் கட்சியையும் சாராமல் இருக்க வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள்.

மெரினா போராட்டத்தின் போது என் மனைவியின் நகையை அடைவு வைத்துப் போராட்டத்தில் பங்கேற்ற வர்களுக்குச் சாப்பாடு வாங்கிக் கொடுத்தேன். என்று லாரன்ஸ் கூறியுள்ளார். (எ)

# மத்திய 'பட்ஜெட்' தாக்கல்

டில்லி, பெப்.02

இந்திய நாடாளுமன்றத்தில் 2017-2018 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதி அமைச்சர் அருண் ஜெட்லி நேற்றுத் தாக்கல் செய்தார்.

மொத்த பட்ஜெட் செலவினமாக 21ஆயிரத்து 47 ஆயிரம் கோடி ரூபா என்று அவர் தெரிவித்துள்ளார்.

முதல் முறையாக பொது வரவு - செலவுத் திட்டத்துடன் ரயில் வரவு - செலவுத் திட்டத்தையும் சேர்த்து நேற்றுக் காலை தாக்கல் செய்த அவர் தனது வரவு - செலவுத் திட்ட உரையை ஆரம்பித்தார்.

மேலும் தனது வரவு - செலவுத் திட்ட உரையில் ஜெட்லி தெரிவித்தவை வருமாறு;

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை அதி கரிக்க இந்திய அரசு உறுதி பூண்டுள்ளது.

நாட்டைச் சீரழித்து வந்த கறுப்புப் பணத்தை ஒழிக்கும் முயற்சியில் அரசு மிகவும் உறுதியாக உள்ளது.

வறட்சியைச் சமாளிக்க நாடு முழுவதும் 5 லட்சம் குளங்கள் ஏற்படுத்தப்பட உள்ளன. நிதிப் பற்றாக்குறை மொத்த உற்பத்தியில் 3.2 சதவீதமாக இருக்கும்.

அறிவியல் தொழில் நுட்பத் துறைக்கு 37 ஆயிரத்து 435 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபடுவோரைத் தடுக்க புதிய சட்டம் கொண்டுவரப்படும்.

நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ரூ.64 ஆயிரம் கோடியாக அதிகரிக்கப்படும்.

விவசாயிகளுக்கு 60 நாள்கள் வட்டி தள்ளுபடி தொடரும். பிரதமரின் வீடு கட்டும் திட்டத்துக்கு 13 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்படும். அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தில் 2019 ஆம் ஆண்டுக்குள் ஒரு கோடி வீடுகள் கட்டப்படும்.

மேலும் உற்பத்தித்துறையில் உலகின் 6 ஆவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. நாட்டின் பண வீக்கம் கட்டுக்குள் உள்ளது. அத்துடன், ஏழைகள் மற்றும் விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள் தொடரும். மக்கள் நலனை மத்திய அரசு மிகவும் கருத்தில் கொள்கிறது. - என்றார். (எ)



## சிலியில் அணையாத காட்டுத் தீ! 11 பேர் சாவு; 1000 வீடுகள் தீக்கிரை!!

### வெளிநாடுகளின் உதவி கேட்கிறது அரசு



சிலியின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் ஏற் பட்ட பயங்கர காட்டு தீயில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஆயிரத்துக்கும் அதிகமான வீடு களும் தீக்கிரையாகின. 10 லட்சம் ஏக்கர் காடும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த பல நாள்களாக எரிந்து வரும் தீயை அணைக்க அந்தநாட்டு அரசு எடுத்த முயற்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப்பயன் அளிக்காததை அடுத்து பிரான்ஸ், அமெரிக்கா, பெரு உள்ளிட்ட நாடுகளிடம் உதவி கேட்கப் பட்டுள் ளது.

இதேவேளை பல இடங்களில் சிலர் வேண்டு மென்றே தீ வைத்ததாகத் தெரிவிக்கப் படும் நிலையில் இத்தகவல்கள் உண்மை என்றால், குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அந்நாட்டு ஜனாதிபதி மிஷல்பேச்சல் அறிவித்துள்ளார். மேலும் இது தொடர்பாக பலர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.(எ)

## ஆபிரிக்க ஒன்றியத்தில் மீள இணைந்தது மொரோக்கோ

மொரோக்கோ நாடு ஆபிரிக்க ஒன்றியத்தில் மீளவும் இணைந்து கொண்டுள்ளது.

இதேவேளை 33 ஆண்டுகளுக்கு முன்னதாக மொரோக்கோ ஆபிரிக்க ஒன்றியத்திலிருந்து விலகிக் கொண்டது.

மேற்கு சஹாரா ஆபிரிக்க ஒன்றியத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்டே மொரோக்கோ ஒன் றியத்திலிருந்து விலகிக் கொண் டது.


ஆபிரிக்க ஒன்றியத்தில் சுமார் 55 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தநிலையில் மொரோக்கோ 110 பில்லியன் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்காவின் ஐந்தாவது மிகப் பெரிய பொருளாதார நாடாக மொரோக்கோ காணப்படுகின்றது.

ஆபிரிக்க ஒன்றியத்தில் மொரோக்கோ இணைந்து கொண்டமை பிராந்திய வலய நாடுகளை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# எந்தத் தடை வந்தாலும் ஐ.எஸ்.தாக்குதல் தொடரும்!

## ட்ரம்பின் நடவடிக்கைக்கு பதிலடி





கெய்ரோ, பெப்.02

வெளியிலிருந்து யாரும் வராவிட்டாலும், உள்ளே இருக்கும் அமெரிக்கர்களைக் கொண்டே அமெரிக்காவைத் தாக்குவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு, ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் பதிலடி கொடுத்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக சமீபத்தில் பதவி ஏற்ற ட்ரம்ப் அதிரடி நடவடிக்கையாக எந்தவொரு நாட்டில் இருந்தும் அகதிகள் அமெரிக்காவுக்குள் வர 4 மாத கால தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

மேலும், உள்நாட்டுப் போரில் சின்னாபின்னமாகி விட்ட சிரியாவில் இருந்து அகதிகள் அமெரிக்காவுக்கு வர காலவரையற்ற தடை விதித்த ட்ரம்ப், ஈராக், சிரியா, ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், ஏமன் ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை 3 மாதங்களுக்கு நிறுத்தி வைக்க உத்தரவிட்டார்.

இந்தநிலையில், ட்ரம்புக்கு பதிலடி கொடுக் கும் விதமாக ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 'டெலிகிராம்' எனும் தகவல் தொடர்பு செயலி வழியே கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அதில், ட்ரம்பின் உத்தரவுகள் எந்தப் பலனையும் தரப் போவது இல்லை. அமெரிக்காவுக்கு வெளியே இருந்து வந்து யாரும் தீவிரவாதத்தாக்குதல்களை நிகழ்த்தப் போவதில்லை. அமெரிக்காவில் பிறந்த, அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக் கர்களைக் கொண்டுதான் அமெரிக்காவைத் தாக்குவோம்.

அமெரிக்காவுக்குள் வருவதற்கு முஸ்லிம்களுக்குத் தடை விதித்து விட்டு, ஈராக், சிரியா மற்றும் ஏமன் நரடுகளில், ட்ரம்ப் முஸ்லிம்களைக் கொன்று குவித்து வருகிறார். இது ஐ.எஸ். இயக்கத்தினருக்கு மறை முகமான சேவை என்பது ட்ரம்புக்குத் தெரியாது. அவரை எதிர்த்து இப்போதே மக்கள் வீதிக்கு வரத் தொடங்கி விட்டனர். கடவுளின் விருப்பப்படி அமெரிக்காவை அவர் கீழ் நோக்கி இழுத்துச் செல்வார் என்பதில் சந்தேகமில்லை என்று அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (எ)

## பயணிகள் விமானத்தில் இளவரசரின் பருந்துகள்



சவூதி அரேபிய இளவரசரின் 80 செல்லப் பருந்துகள் பயணிகள் விமானத்தில் பயணம் செய்தன. பருந் துகள் விமானத்தில் பயணம் செய்யும் காணொலி இணையத் தளத்தில் பரவி வருகிறது.

## ஏழரை மில். குழந்தைகள் ஊட்டச்சத்து இன்றி பாதிப்பு



உலக அளவில் ஏழரை மில்லியன் குழந்தைகளுக்கு மேலானோர் இந்த ஆண்டு ஊட்டச்சத்து இல்லாமல் கடுமையாகப் பாதிக்கப் படுகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளுக்கான நிறுவனமான யுனிசெப் தெரிவித்துள்ளது.

சிரியா, நைஜீரியா மற்றும் ஏமன் உட்பட பிற மனிதநேய நெருக்கடிகள் நடைபெறும் நாடுகளிலும் உள்ள 48 மில்லியன் குழந்தைகளுக்கு உதவ 3.3 பில்லியன் டொலர் தேவைப்படுவதாக அந்த நிறுவனம் கோரியுள்ளது.

சுத்தமான குடிதண்ணீர் மற்றும் தட்டம்மை தடுப்பூசி, அடிப்படை பராமரிப்பு மற்றும் கல்விக்காகவும் இந்த நிதிகள் பயன்படுத்தப்படும்.

7 ஆண்டுகளாகப் போர் நடைபெற்று வருகின்ற சிரியாவில், இந்த நிதியில் மூன்றில் ஒரு பங்கு பயன்படுத்தப்படும் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது. (எ)

## ஈரான் நாட்டின் ஏவுகணை சோதனை விவகாரம் அவசரமாக கூடுகிறது ஐ.நா.பாதுகாப்புச் சபை

வொஷிங்டன். பெப்.02

ஈரான் ஏவுகணைச் சோதனை விவகாரம் தொடர்பில் விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை அவசரமாக கூடவுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஈரான் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் வல்லமை படைத்த ஏவுகணைகளைச் சோதித்துப் பார்க்க ஐ.நா. பாதுகாப்புச் சபை தடை விதித்துத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

இந்த நிலையில் அந்த நாடு, நடுத்தர ரக ஏவுகணை ஒன்றைக் கடந்த 29 ஆம் திகதி ஏவிச் சோதித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதுபற்றி அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கருத்துத் தெரிவிக்கையில்–

ஈரான் நடத்தியுள்ள ஏவுகணைச் சோதனை, ஐ.நா. பாதுகாப்புச்சபை தீர்மானத்தை மீறிய நடவடிக்கையா என்பது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது. ஐ.நா. தீர்மானத்தை மீறி நடவடிக்கைகள் எடுக்கின்றபோது அல்லது தீர்மானத்துக்கு ஒவ்வாத செயல்களில் ஈடுபடுகின்ற போது, ஈரான் அதற்குப் பொறுப்பேற்க கூறி நடவடிக்கை எடுப்போம். மற்றைய நாடுகளும் இதையே பின்பற்றும் என்றும் கூறினார்.

இதேவேளை, அமெரிக்கா நாடாளுமன்ற செனட் சபையின் வெளியுறவுக் குழுத் தலைவர் பொப்கார்கர், ஈரானின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், ஈரான் ஏவுகணைச் சோதனை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அவசரமாகக் கூடி விவாதிக்க வேண்டும் என்று இஸ்ரேல் தூதுவர் டேனி டேனான் வலியுறுத்தி உள்ளார்.

இதையடுத்து ஐ.நா. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அமெரிக்காவும் வலியுறுத்தி உள்ளதாகவும், அதன்போது ஈரான் விவகாரம் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை அவசரமாக கூடுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (எ)



குழாய்க் கிணறு அமைப்பதற்காக 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் இருந்து வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட உடுவில் பகுதியில் உள்ள ஒரு குடும்பத்துக்கு வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவின் நிதியில் இருந்து ஒரு தொகை பணத்தை தொகுதி அமைப்பாளர் அண்மையில் வழங்கினார். (ஐ-21)



2016 ஆம் ஆண்டுக்கான மாகாணசபை பிரமாண நிதியின் மூலம் யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பாக 12தையல் இயந்திரங்கள் மற்றும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு சிறு கடை அமைப்பதற்கான பொருள்கள் அண்மையில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனால் வழங்கப்பட்டன. (ஐ-21)

மாணவர்களின் கல்விக்கு அடித்தளம் இடுவது முன்பள்ளிகளாகும் அந்த வகையில் இலுப்பைக்கடவை ரூபி முன்பள்ளி பாடசாலை சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவினார் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன்.(ஐ)











கியூடெக் கரித்தாஸ் சர்வமத சக வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நாவாந்துறை பொம்மைவெளி, மூர் வீதி பகுதிகளில் தைப்பொங்கல் விழா சர்வமத சமயத் தலைவர்களுடன் அரச உத்தியோகத்தர்களும், 'கியூடெக்' கரித்தாஸ் இணைப்பாளரும், சமூகத்தவர்களும் ஒன்றிணைந்து கொண்டாடினர். (ஐ)



யாழ்ப்பாணம் புதிய சோனகத்தெரு முதியோர் சங்கம் ஜே/88 உறுப்பினர்களுக்கு அண்மையில் புதிய குடியிருப்பு இளைய நிலா சன சமூக நிலையத்தில் வைத்து யாழ். கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணியகத் தலைவர் மௌலவி சுபி யான் பேரிச்சம்பழப் பொதிகளை அன்பளிப்பாக வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்... (இ)








நோர்வே குருநகர் பேர்கன் ஒஸ்லோ இணையத்தால் 2017 ஆம் ஆண்டில் தரம் 3,4,5 மாணவர்களை இணைத்துக் கொள்ளலும் கற்றல் உபகரணங்களை வழங்கிய நிகழ்வும் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. பங்குத் தந்தை அருட்பணி ஜே.ஜே.மௌலிஸ் அடிகளாரின் ஆசியுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வு இணையத் தலைவர் சி.சிலுவைதாஸ் தலைமையில் நடந்தது. நிகழ்வில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் கே.கலியுகனும் மகளிர் பாடசாலை அதிபர் ஏ.மரியதாஸனும் ஏராளமான பெற்றோர்களும், பிள்ளைகளும் கலந்து கொண்டனர். நிகழ்வின் சில பதிவுகள்...

# இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பிடித்தார்

# தமிழக வீரர் அபினவ் முகுந்த்!

புதுடில்லி, பெப்.02

ஐந்து ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் இந்திய டெஸ்ட் அணியில் தமிழக வீரர் அபினவ் முகுந்த் சேர்க்கப் பட்டுள்ளார். இந்த அணியில் இடம்பெறுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பார்த்திவ் படேலுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

முதன் முறையாக டெஸ்ட் போட்டியில் பங்கேற்க பங்களாதேஷ் அணி இந்தியாவுக்குச் செல்கிறது. ஐதராபாத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் இப்போட்டிக்கான 16 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டது.

தலைவராக கோஹ்லி தொடர்கிறார்.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 2 டெஸ்ட் அணியில் இடம் பிடித்த மணிஷ் பாண்டே நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக தமிழகத்தின் அபினவ் முகுந்த் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நாட்டிங்காம் டெஸ்டில் பங்கேற்ற இவர், ஐந்து ஆண்டுகளுக்குப் பின், இந்திய அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

27 வயதான அபிநவ் முகுந்த் சுமார் 6 வருடங்களுக்கு முன் இந்தியாவின் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அறிமுகமானார்.

இந்திய அணி 2011 இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. அப்போது கிங்ஸ்டனில் நடைபெற்ற டெஸ்டில் அறிமுகமானார்.



இதில் முதல் இன்னிங்ஸில் 11 ஓட்டங்களும், 2 ஆவது இன்னிங்ஸில் 25 ஓட்டங்களையும் எடுத்தார். இந்தப் போட்டியில் இந்தியா 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பார்படோஸில் நடைபெற்ற 2 ஆவது போட்டியின் முதல் இன்னிங்ஸில் 1 ஓட்டமும், 2 ஆவது இன்னிங்ஸில் 48 ஓட்டங்களையும் சேர்த்தார். இந்த போட்டி சமநிலையில் முடிவடைந்தது. 3 ஆவது போட்டியின் முதல் இன்னிங்ஸில் 62 ஓட்டங்களைச் சேர்த்தார். அதன்பின் லார்ட்சில் நடைபெற்ற போட்டியில் முதல் இன்னிங்ஸில் 49 ஓட்டங்களும், 2 ஆவது இன்னிங்ஸில் 12 ஓட்டங்களும் எடுத்தார். நாட்டிங்காமில் நடைபெற்ற போட்டியில் 3 ஓட்டங்களைச் சேர்த்தார். அதன் பின் இந்திய அணியில் அவர் இடம்பெறவில்லை.

5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இடம் பிடித்துள்ளார். கடந்த ரஞ்சி கிரிக்கெட் தொடரில் அவர் 14 இன்னிங்ஸில் 849 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

இதேபோல, விக்கெட் காப்பாளராக சகா தேர்வாகியுள்ளார். கடைசி 3 டெஸ்டில் இவருக்குப் பதில் களமிறங்கிய பார்த்திவ் படேல் சிறப்பாக செயற்பட்டிருந்தார். ஆனால், இரானி கோப்பை போட்டியில் இரட்டைச் சதம் அடித்த சகாவுக்கு கடைசியில் அதிஷ்டம் அடித்துள்ளது.

மேலும், காயத்தில் இருந்து மீண்ட முரளி விஜய், லோகேஷ் ராகுல், ரகானே, புஜாரா, கருண் நாயர் வழக்கம் போல இடம் பிடித்துள்ளனர்.

**மீண்டும் ஜெயந்த்**

பந்து வீச்சில் முகமது ஷமி தேர்வாகவில்லை. வேகப்பந்து வீச்சில் சிரேஷ்ட வீரர் இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், புவனேஷ்வர் குமார, சகலதுறை வீரர் ஹர்திக் பாண்ட்யா ஆகியோருக்கு இடம் கிடைத்துள்ளது.

சுழல் பந்து வீச்சில் முன்னணி வீரர்கள் அஷ்வின், ஜடேஜா, அமித் மிஸ்ரா கூட்டணியுடன் ஜெயந்த் யாதவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அணி விவரம் வருமாறு:- கோஹ்லி (தலைவர்), முரளி விஜய், லோகேஷ் ராகுல், புஜாரா, ரகானே, கருண் நாயர், சகா, அஷ்வின், ஜடேஜா, ஜெயந்த் யாதவ், உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், அபினவ் முகுந்த், ஹர்திக் பாண்ட்யா, அமித் மிஸ்ரா.

பங்களாதேஷ் தொடருக்குப் பின் இந்தியா வரும் ஆஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இதற்குத் தயாராகும் வகையில் இந்தியா 'ஏ' அணியுடன், 3 நாள்கள் பயிற்சிப் போட்டியில் பங்கேற்கவுள்ளது. எதிர்வரும் 16, 18 ஆம் திகதிகளில் இப் போட்டி மும்பையில் இடம் பெறவுள்ளது.


இதற்கான இந்திய 'ஏ' அணிக்கு சகலதுறை வீரர் ஹர்திக் பாண்ட்யா தலைவராக நியமிக்கப்பட்டார்.

தமிழகத்தின் பாபா இந்திரஜித்துக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. மேலும், ஸ்ரேயாஸ் ஐயர், ரிஷாப் பன்ட், இஷான் கிஷான், குல்தீப் யாதவ் உள்ளிட்டோரும் இதற்கான அணியில் உள்ளனர்.

# முப்பத்தோராவது தேசிய இளைஞர் கரப்பந்தாட்டம்; புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று அணிகள் சம்பியன்!







முல்லைத்தீவு, பெப்.02

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட காரியாலயம் ஒழுங்கு செய்த முப்பத்தொராவது தேசிய இளைஞர் ரூபவாகினி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இந்தக் கரப்பந்தாட்டப் போட்டிகள் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

13 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களை உள்ளடக்கி பிரதேச செயலக பிரிவு அடிப்படையில் ஆண்கள் அணி இரண்டையும் பெண்கள் அணி இரண்டினையும் விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், புதுக் குடியிருப்பு, கரைதுறைப் பற்று, துணுக்காய் மாந்தை கிழக்கு மற்றும் மணலாறு உள்ளிட்ட ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலிருந்தும் ஐந்து பெண்கள் அணிகளும், பதினொரு ஆண்கள் அணிகளும் இப்போட்டியில் பங்குபற்றி உள்ளன.


கடந்த செவ்வாய்க் கிழமை காலை முதல் மாலை வரை இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

இப்போட்டிகளில் பெண்களுக்கான போட்டியில் புதுக்குடியிருப்பு உடையார்கட்டு வடக்கு நண்பர்கள் இளைஞர் கழக அணி முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் முத்து ஐயன் கட்டு பாரதி இளைஞர் கழக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

ஆண்களுக்கான போட்டியில் கரைதுறைப் பற்று இலுப்பையடி இளைஞர் கழக அணி முதலாமிடத்தையும், ஒட்டுசுட்டான் மாங்குளம் ஜெயந்த் ஸ்ரார் இளைஞர் கழக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

முதலாமிடத்தை பெற்றவர்களுக்காக, வெற்றி கிண்ணமும் ஏழாயிரத்து ஐநூறு ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன. இரண்டாமிடத்தை பெற்றவர்களுக்காக வெற்றி கிண்ணமும் ஐயாயிரம் ரூபா பணப் பரிசும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வழங்கப்பட்டன. (க-81)

# மேற்கிந்திய தீவு அணியின் ரஸலுக்கு ஓராண்டுத் தடை!






கிங்ஸ்டன், பெப்.02

ஊக்க மருந்து தடுப்பு விதிகளை மீறிய வீரர் ஆந்த்ரே ரஸலுக்கு ஓர் ஆண்டு தடை விதிக்கப் பட்டுள்ளது.

கிரிக்கெட் வீரர்களுக்கு ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த விதிப்படி கிரிக் கெட் வீரர் தான் எங்கு இருக் கிறார் என்று விளையாட்டு அமைப்பு அல்லது தேசிய ஊக்க மருந்து தடுப்பு அமைப்பிடம் தெரிவிக்க வேண்டும்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறை வீரர் ஆந்த்ரே ரஸல் ஊக்க மருந்து தடுப்பு விதிமுறை களை மீறியுள்ளார். எங்கு இருக்கிறார் என்ற விவரத் தைத் தெரிவிக்காமல் அவர் இருந்துள்ளார்.

11 மாத காலத்தில் அவர் 3 முறை இந்த விதி முறையை மீறி இருக்கிறார்.

2015 ஆம் ஆண்டில் ரஸல் 3 தடவை தேசிய ஊக்க மருந்து மையத்துக்கு வரத் தவறிவிட்டார். இதனால் ஊக்க மருந்து தடுப்பு விதிகளை மீறிய குற்றவாளியாக அவர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து ஆந்த்ரே ரஸலுக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட் டுள்ளது. ஹக் பல்க்னெர் தலைமையிலான ஊக்க மருந்து தடுப்பு நடுவர் மன்றம் இதை அறிவித்தது.

நேற்று முன்தினம் முதல் (31, ஜனவரி 2017) இந்த தடை அமுலுக்கு வருகின்றது. 2018ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி வரை ரஸல் மீதான தடை இருக்கும்.

2016 ஆம் ஆண்டு நடந்த 20 ஓவர் உலக கோப்பையை மேற்கிந்திய தீவுகள் வெல்ல 28 வய தான ரஸல் முக்கிய பங்கு வகித்திருந்தார். இரண்டு முறை இருபதுக்கு 20 உலகக் கோப்பையை வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி யில் ரஸ்ல் இடம்பெற் றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணிக்கு எதிரான பங்களாதேஷ் அணி அறிவிப்பு



டாக்கா, பெப்.02

இந்தியாவுக்கு எதிரான ஒரேயொரு டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட பங்களாதேஷ் அணி நேற்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியா -பங்களாதேஷ் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் எதிர்வரும் 9 ஆம் திகதி ஐதராபாத்தில் தொடங்குகிறது.

இதற்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது, இந்நிலையில் பங்களா தேஷ் கிரிக்கெட் சபை இந் தியாவுக்கு எதிரான தங்கள் அணியை நேற்று அறிவித் துள்ளது.


டெஸ்ட் போட்டிக்கான பங்களாதேஷ் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம் வருமாறு:-

முஸ்டாபிஜூர் ரஹிம் (தலைவர்), தமீம் இக்பால், சவுமியா சர்கார், மெஹ்முதுல்லா, சாஹிப் அல்ஹசன், மெஹதி ஹாசன் மிர்ாஸ், இம்ருல் கெய்ஸ், மொமினுல் ஹக்யூ, சபீர் ரஹ்மான், லித்தோன் தாஸ், தஸ்கின் அஹமது, ஷுவாஷிஷ் ராய், தைஜூல் இஸ்லாம், கம்ருல் இஸ்லாம் ரபி, ஷபியுல் இஸ்லாம்.

பங்களாதேஷ் அணி டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பின் முதன்முறையாக தற்போது இந்தியாவுக்கு சென்று விளையாடவுள் ளது என்பது குறிப்பிடத் தக்கது.

## ஒலிம்பிக் பதக்கத்தை இழப்பதால் எனது மதிப்பு குறைந்து விடாது!

### உசைன் போல்ட் கூறுகிறார்



பேர்ன், பெப்.02

ஒலிம்பிக் விளையாட்டு விழாக்களில் வென்றெ டுத்த ஒன்பது தங்கப்பதக் கங்களில் ஒன்றை இழப் பதன் மூலம் தனது மதிப்புக் குறைந்து விடாது என ஜெமெய்க்காவின் குறுந்தூர ஓட்ட நாயகன் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

பெய்ஜிங் 2008 ஒலிம் பிக் விளையாட்டு விழாவில் பங்குபற்றி ஜெமெய்க்கா தொடர் ஓட்ட அணி தங்கப் பதக்கம் வென்றது.

இந்த ஜெமெய்க்கா தொடர் ஓட்ட அணியில் இடம்பெற்ற நெஸ்டா கார்ட்டர், ஊக்கமருந்து பாவனையில் சிக்கியமையை அடுத்து ஒலிம்பிக் பதக்கம் ஒன்றை உசைன் போல்ட் திருப்பிக் கொடுக்க வேண் டிய நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளார்.

பெய்ஜிங்கில் ஜெமெய்க்காவின் 4X100 மீற்றர் தொடர் ஓட்ட அணி யில் இடம்பெற்ற நெஸ்டா கார்ட்டருடன் எவ்வித கோபதாபமும் இல்லை என 30 வயதான போல்ட் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது பதக்கங்களில் ஒன்றை மீளக் கொடுப்பதென்பது மனதுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துகின்றது. இது குறித்து நான் கவலை அடைகின்றேன். ஆனால், வாழ்க்கையில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறு கின்றமை சகஜம் என்றும் தெரிவித்துள்ளார்.

2011, 2013, 2015 ஆகிய மூன்று உலக மெய்வல்லுநர் வல்லவர் (வேர்ல்ட் சம்பியன்ஷிப்) போட்டிகளில் 4X100மீற்றர் தொடர் ஓட்ட நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற ஜெமெய்க்கா அணியிலும் 31 வயதான கார்ட்டர் அங்கம் வகித்திருந்தார்.

பெய்ஜிங் 2008 ஒலிம்பிக் போட்டிகளின் போது கார்ட்டரிடமிருந்து சேகரிக்கப்பட்ட சிறுநீர் மாதிரி மீள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது அவரது இரத்தத்தில் தடைசெய்யப் பட்ட ஊக்கமருந்து கலந்திருப்பது நிரூபண மானதை அடுத்தே ஜெமெய்க்கா அணியின் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் மீளப்பெறப்படவுள்ளது.

இதேவேளை, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தீர்மானத்தை எதிர்த்து விளையாட்டுத்துறைக்கான நியாயாதிக்க சபையிடம் ஜெமெய்க்கா ஒலிம்பிக் குழு மேன்முறையீடு செய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மனுத்தாக்கல்!

புதுடில்லி, பெப்.02

சர்வதேச கிரிக்கெட் சபை கூட்டத்தில் பங்கேற்க மூன்று பேருக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட 3 பேர் கொண்ட புதிய நிர்வாகக் குழுவினரே ஐ.சி.சி. கூட்டத்தில் பங்கேற்கத் தகுதியானவர்கள், அவர்களைத் தான் அனுமதிக்க வேண்டும் என்று ஐ.சி.சி தலைவர் சசாங்க் மனோகருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது என்று லோதா குழு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே, இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. விதிப்படி ஒரு






நாட்டு கிரிக்கெட் சபையில் இருந்து ஒருவர் மட்டுமே பங்கேற்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தைப்பூசத்தன்று அறநெறிப் பாடசாலை நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.02

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி - தைப்பூசத் தினத்தன்று - பிற்பகல் 3.45 மணிக்கு, அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்படும்.

ஆலயவழிபாட்டின்மகத்துவத்தையும் இந்துப் பண்பாட்டின் பெருமையையும் மாணவர்கள் உணர வைப்பதற்கும் ஆன்மீகக் கலாசாரப் பண்பாட்டுச் செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தும் நோக்கத்துடனும் இந்த அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்படுகிறது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (இ)

## உரும்பிராயில் மெய்வன்மை நிகழ்வு

உரும்பிராய், பெப்.02

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்கல் ஒரு மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில்வித்தியாலய அதிபர் கே.தவசீலன் தலைமையில் நடைபெறும்.

வித்தியாலய பழைய மாணவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற பதிவாளருமான எஸ்.சிவராம் பிரதமவிருந்தினராகவும், வைத்தியர் எஸ்.வி. கணேசவேல், யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்பக் கல்விவிளையாட்டுச்செயற்றிட்ட இணைப்பாளர் எஸ்.சிவகாந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், கிராம உத்தியோகத்தர் எஸ்.எழிலரசன் கௌரவ விருந்தினராகவும் பங்குபற்றுவர். (உ)

## துர்க்காதேவி ஆலய தெற்கு வாசல் கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.02

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்துக்கான தெற்கு வாசல் கும்பாபிஷேகவிழா, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய முதல்வர் மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்களின் ஆற்றுப்படுத்தல் மற்றும் ஆசியுடனும் கும்பாபிஷேகவிழா இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் இம்மாதம் எட்டாம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும். (அ)

## ஜோதிடருக்கு பிணை அனுமதி

கொழும்பு, பெப்.02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவமரியாதை செய்யும் வகையில் ஆரூடம் தெரிவித்தார் என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜோதிடர் விஜித ரோஹண விஜயமுனி நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜனவரி 26 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மரணமாவாரா என ஜோதிடர் விஜித ரோஹண விஜயமுனி ஆரூடம் தெரிவித்திருந்தார். (ஓ)

- ✦ கிணறுகளில் ஒயில், கிறீஸ் கலந்துள்ளமை உறுதி
- ✦ எண்ணெய்க் கழிவு தொடர்ச்சியாக நிலத்துக்குள்
- ✦ ஒயில் கலந்தமை குறித்து அறிக்கை தர பின்னடிப்பு
- ✦ தவறிழைத்தோர் கைது செய்யப்படவேயில்லை
- ✦ சந்தேகநபர்களைக் காப்பாற்ற பலதரப்பும் முயற்சி
- ✦ பொலிஸ் விசாரணையில் முன்னேற்றமே இல்லை
- ✦ குற்றவாளிகளைக் காப்பாற்றும் மறைகரம் எது?
- ✦ அதற்கு அரச அதிகாரிகளும் உடந்தையா?
- ✦ பிழையான அறிக்கைகளுக்கு லஞ்சப் பணம்?

# சுன்னாகம் நிலத்தடி நீர் விவகாரத்தில் மல்லாகம் நீதிமன்றம் கடுஞ்சீற்றம்

### நிதி மோசடி பொலிஸ் பிரிவை விசாரிக்குமாறும் பணிப்பு

மல்லாகம், பெப்.02

சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினைதொடர்பாகமல்லாக மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம்காட்டமானகட்டளை ஒன்றைவெளியிட்டிருக்கின்றது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி அ.யூட்சன் கடந்த 23 ஆம் திகதியிட்டுஇதுதொடர்பாகக்கட்டளை ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

அந்தக் கட்டளையின் முழு விவரம் வருமாறு:-

**அதிகாரிகள் கூறியவை**

இன்றைய தினம் சுகாதார அமைச்சின் அறிக்கை வழக்கேட்டில்தாக்கல்செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் இருந்து குறித்த கிணறுகளில் 0.2 மில்லிக்கிராம் அளவு நியமத்துக்கு குறைவாகவேஒயிலும் கிறிஸும் காணப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. இதுவரை காலமும் திறந்த நீதிமன்றத்தில் தோன்றிய அதிகாரிகள் 2 மில்லிக்கிராம் அளவு காணப்பட முடியும் என பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தனர். ஆனால் 0.2 மில்லிக்கிராம் அள்வே காணப்படலாம் என சுகாதார அமைச்சின் அறிக்கை சுட் டிக்காட்டியுள்ளது.

**கிணறுகளில் ஒயில், கிறீஸ்**

மேற்படிவழக்கில் 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியில் இருந்து இன்று வரை பலதரப்பட்ட கட்டளைகள் மன்றினால்வழங்கப்பட்டுஇருக்கின்றன. பல்வேறுபட்ட அறிக்கைகள் இந்த வழக்கேட்டில் அணைக்கப்பட்டுள்ளன. அவற்றை மன்று ஆராய்ந்து பார்த்ததிலிருந்து பெரும்பாலான அறிக்கைகளில் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் அமைந்துள்ள கிணறுகளில் ஒயில், கிறீஸ் என்பனகலந்துள்ளனஎன்பதுமிகத் தெளிவாகின்றது. அது மனித நுகர்வுக்கு ஒவ்வாதது என்பதும் மன்றுக்கு தெளிவாகின்றது.

**'நொதேர்ன் பவர்' இயங்கிய நிலைமை**

ஏற்கனவே இந்த ஒயில், கிறீஸ் என்பன எவ்வாறு நிலத்திற்குள் சென்றிருக்கும் என்பது தொடர்பில் பல்வேறுபட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு மன்றின் முன்னுள்ள அறிக்கைகளின் படி பார்க்கும்போது 2009 இல் இருந்து இயங்கி வருகின்ற 'நொதேர்ன் பவர் நிறுவனம்' அமைந்துள்ள பகுதியில் தொடர்ச்சியாகஎண்ணெய்க்கழிவுகள் நிலத்துக்குள் செல்லக் கூடியவாறு உரிய சுகாதார நியமங்கள் பின்பற்றப்படாத நிலையில் மின்பிறப்பாக்கி நிறுவனம் இயங்கி வந்துள்ளது என்பது மிகத்தெளிவாகத்தெரிகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் மூலவழக்கேட்டில்உள்ள அறிக்கைகளைஆராய்ந்ததிலும், மன்றினுடைய நேரடியான அவதானக்குறிப்புக்களைப்பார்த்ததிலிருந்தும், வழக்கேட்டில் காணப்படுகின்ற வர்ணப் புகைப்படங்களைஅவதானித்ததில் இருந்தும், குறித்த நிறுவனத்தில் இருந்த கழிவகற்றல் நிலையானது ஒரு சீரற்ற முறையில் பேணப்பட்டு வந்துள்ளது என்பது மிகவும் தெளிவாகின்றது. பலமுறை குறித்த ஒயில் எங்கிருந்துநிலத்தடிநீரில்கலந்துள்ளது என்பதை மன்றுக்கு தெளிவுபடுத்துமாறு அறிவுறுத்தியிருந்த போதும் அது எவ்வாறு நிலத்தடி நீரில் கலந்துள்ளது என்பது தொடர்பில் எவ்விதமான அறிக்கைகளையும் யாரும்தாக்கல்செய்யவில்லை.

**சிலரின் அறிக்கை**

அதேநேரம்குறித்தநிலத்தடி நீரில் ஒயில் மற்றும் கிறீஸ் அளவு காணப்படவில்லை என்பது போல் சிலர் அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை பொது மக்களுக்கும் பகிரங்கமாக வெளியிட்டிருந்தனர். இதன்மூலம்மத்தியஅரசினால் மக்களுக்காககுடிதண்ணீர்விநியோகிப்பதற்குவழங்கப்பட்டநிதியும் நிறுத்தப்பட்டுள்ளதாக மன்றிலே நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் அதிகாரியினால்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்களுடைய முறைப்பாடுகள் 2011 இல் இருந்துகிடைக்கப்பெற்றதற்கான போதிய ஆதாரங்கள்வழக்கேட்டில்காணப்படுகின்றன. ஆனால் இன்றுவரை நிலத்தடி நீரில் இவ்வாறான மனித நுகர்வுக்கு ஒவ்வாத பாரிய கழிவுகளை விட்டவர்கள் தொடர்பில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அவர்களைக் காப்பாற்றும் முகமாக பல்வேறுப்பட்ட தரப்பினர்களும் முயற்சிப்பது போல் மன்றுக்குத் தோன்றுகின்றது. இந்த விடயத்தில் இவ்வழக்கு முதலில் பொதுச்சுகாதாரபரிசோதகர்களினால்தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும்பின்னர் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டும்விசாரணைகளில்எவ்விதமுன்னேற்றஅறிக்கைகளும் மன்றில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவும் இல்லை. எனவே இன்று மீண்டும் பின்வருமாறு கட்டளை ஆக்கப்படுகின்றது:-

குறித்தநிலத்தடிநீரில்ஒயில் மற்றும்கிறீஸ் எங்கிருந்து கலந்துள்ளது என்பது தொடர்பில் இலங்கையில் செயற்படுகின்ற கனியவளங்கள் தொடர்பான ஆய்வுகள்மையம்உடனடியாக மன்றுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் குறித்த கனியவள ஆய்வுகள் செய்யும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு மன்று கட்டளையிடுகின்றது.

அத்தோடு குறித்த வழக்கின் குற்றச் செயல்களைப் புரிந்தவர்களைத் தப்ப வைப்பதற்கு பல்வேறுதரப்பட்டஅழுத்தங்களும் அதிகாரிகளுக்குப் பிரயோகிக்கப்படுவதாகமன்றுக்குத்தோன்றுகின்றது. யாரோ ஒரு மறைகரம் இக்குற்றச்செயலைச்செய்தவர்களைக் காப்பாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாகத் தென்படுவதால், குறித்த விடயம் தொடர்பில் சாதாரண பொலிஸ்அதிகாரிகளால் உரிய முறையில் விசாரணைகள் இதுவரையும் செய்யப்படாமை மன்றினால் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த வழக்கில் பாரிய சுற்றுப்புறச் சூழல் மாசடைதல் ஒன்று ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிய நிலையிலும், இன்றுவரை எதுவித சட்ட நடவடிக்கைகளும் குறித்த குற்றச்செயலைச்செய்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படவில்லை என்பதும் பல அரச அதிகாரிகள் இந்த குற்றச் செயலுக்கு உடந்தையாக உள்ளார்கள் என்ற சந்தேகமும் மன்றுக்கு ஏற்பட்டுள்ளது. பல அரச அதிகாரிகள் மற்றும் பிழையான அறிக்கைகளைத் தயாரித்து வெளியிட்டவர்கள் ஏதாவது பணங்களும் பெற்றுக் கொண்டு அவ்வாறு செய்தனரா என்ற கேள்வியும் மன்றுக்குத் தோன்றுகின்றது. குறித்த விடயம் தொடர்பாகப் பணிப்பாளர், நிதி மோசடி விசாரணைப் பிரிவு விசாரணை செய்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு மன்று குறித்த பணிப்பாளர் நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்குக் கட்டளையிடுகின்றது. கட்டளையின் பிரதியைஉரியஅதிகாரிகளுக்கு அனுப்பவும். - என்று உள்ளது.

- வழக்கு மார்ச் 27 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. (உ)

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.02

கோண்டாவில் மேற்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீசுந்தர ஞானபைரவ சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் இடம்பெறும்.

இன்று வியாழக்கிழமை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தி அருள்பெறலாம்.

## 60 கைதிகளின் மரண தண்டனை ஆயுளாக மாற்றம்

இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 60 மரண தண்டனைக் கைதிகளுக்கு தண்டனையைக் குறைத்து ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனமன்னிப்புவழங்கியுள்ளார்.

இதற்கமைய இந்த கைதிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார்.

நீதியமைச்சர்விஜயதாசராஜபக்ஷவின் பரிந்துரைக்கமைய ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் நிமல் ஈ.திஸாநாயக்க தலைமையிலான குழுவினால் தெரிவு செய்யப்பட்ட 60 மரண தண்டனை கைதிகளின் தண்டனையே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளது. (ஓ)

## கருணாவின் வழக்கு ஒத்திவைப்பு

அரச வாகனங்களை முறைகேடாகப்பயன்படுத்தினார்என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் கருணா ஏனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு எதிரான வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கை எதிர்வரும் மே 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிவான் லால் ரணசிங்க பண்டார உத்தரவிட்டார்.

அத்துடன் வாரத்துக்கு ஒரு முறை நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குச் சமுகமளிக்க வேண்டும் என விதிக்கப்பட்டிருந்த நிபந்தனையை மாதத்துக்கு ஒரு முறை என மாற்றுமாறும் நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஓ)

## கூட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்துடனேயே அவர்கள் வடக்குக்கான தீர்வை எதிர்பார்க்கின்றனர்.

வடக்கும் தெற்கும் ஒன்றிணைந்தேசெயற்படவேண்டும். வடக்கு மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களுடன் இணைந்து அபிவிருத்தி செய்தால் அவர்களின் மனங்களை வெற்றிகொள்ளலாம். மாறாக அவர்கள் விரும்பாத - அவர்களுக்குத்தேவையில்லாத அபிவிருத்திகளை நாம் அவர்களிடம் திணிக்கக்கூடாது.

இப்படிப் போனால் நிச்சயம் இனவாதத்தை ஒழிக்கலாம்.

பரீட்சார்த்தமாக இப்படி ஆகக் குறைந்தது ஒரு வருடமாவது செய்து பார்ப்போம். இதனால் நிச்சயம் மாற்றத்தைக் காணமுடியும்.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் மனம் திறந்து பேச வேண்டும். அவ்வாறுசெய்தால் நல்ல பலனைப் பெறலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நான் அறிந்தவரை எந்தவோர் இரகசிய ஒப்பந்தமும் கிடையாது. குறுகிய அரசியல்லாபத்துக்காக நாம் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக் கூடாது.

இனியும் யுத்தம் செய்ய முடியாது, இனவாதத்தைத் தூண்ட முடியாது. நல்லிணக்கம் ஊடாகவும் நல்ல அபிவிருத்திகளின் ஊடாகவுமே இந்த நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும். அந்த அபிவிருத்தியில் இருந்து வடக்கைப் புறந்தள்ளிவிட முடியாது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ே)

காலைக்கதிர்
Kalaikkathir

# கேப்பாபிலவு மக்கள் தொடர்ந்து போராட்டம்

## இரவிலும் கலைய மறுப்பு



கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள கேப்பாபிலவு கிராம சேவையாளர் பிரிவின் பிலவுக்குடியிருப்பில்விமானப்படையினரால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட தமது காணிகளைத் தம்மிடம் மீள வழங்குமாறு கோரி அக்கிராமமக்களால்நேற்றுமுன்தினம்ஆரம்பிக்கப்பட்டகவனவீர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

தமது காணிகளை மீள வழங்கும்திகதியை அறிவிக்கும் வரைதமதுபோராட்டம்தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடிய முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் காணிகளை மீள வழங்குவதற்கு மூன்றுமாதகால அவகாசத்தைக் கோரியபோதிலும் அதனை ஏற்பதற்கு அக்கிராம மக்கள் மறுத்துள்ளனர்.

இதையடுத்து வனவளத் திணைக்களத்தினருடன் கலந்துரையாடிக் காணிகளை மீள வழங்குவதுதொடர்பில்அறிவிப்போம் என தொலைபேசி ஊடாக பிரதேச செயலாளர் வழங்கிய உறுதிமொழியை ஏற்பதற்கும் மக்கள் மறுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் மற்றும் மாகாணசபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன் ஆகியோர் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளனர். (ஓ)

## தீர்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காண்பதற்கு மஹிந்த உதவ வேண்டும். அது அவரின் புனிதமான கடமை. அவர் அந்தக் கடமையைத் தவறக்கூடாது – என்றும் அவர் சொன்னார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

அபிவிருத்தி என்பது தக்க வைத்துக்கொள்ளும் அபிவிருத்தியாக இருக்கவேண்டும். இந்த நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். வறுமை ஒழிக்கப்பட வேண்டும். அரசு இதில் வெற்றிபெறவேண்டும். இதற்காக தனது ஆட்சிக்காலத்தில் சில விடயங்களைச் செய்ய வேண்டும்என ஜனாதிபதிசெயற்பட்டு வருகின்றார்.

பட்டிருப்புத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய எஸ்.எம்.இராசமாணிக்கம் ஒரு பெரும் தலைவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் திகழ்ந்தார், கடமை புரிந்தார். அவர் எல்லோரது மதிப்பினையும் பெற்ற ஒரு தலைவர்.

1961ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினை முற்றுகையிட்டு நாங்கள் போராட்டம் நடத்தியபோது எங்களைக் கைது செய்து பனாகொடை இராணுவமுகாமில் அடைத்தார்கள். அன்று எனக்கு வயது 28. இளம் சட்டத்தரணியாக கடமையாற்றி வந்தேன்.

நாங்கள் உரிமைக்காகத் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றோம். இன்று பேச்சு மூலம் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி அந்த அரசமைப்பின் ஊடாக நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான நியாயமான தீர்வினைக்கண்டு இந்த நாட்டில் வாழும் மக்கள் மத்தியில் சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகின்றோம்.

புதிய அரசமைப்பின் ஊடாக நாங்கள் பிரிவினையை ஏற்படுத்த முனைகின்றோம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகின்றார். இது தவறான கருத்தாகும். உண்மையற்ற கருத்து.

பிரிக்கப்படாத ஒருமித்த நாட்டுக்குள் ஓர் அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்துமக்களும்ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். பெரும்பான்மை சிங்கள மக்கள், தமிழ் மக்கள், இஸ்லாமிய மக்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளும் வகையில் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அது பிரிக்கப்படாத ஒன்றுபட்ட நாட்டுக்குள் வழங்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

இந்தப் பணியில் மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து கொள்ளவேண்டும் என இங்கு நான் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன். உங்கள் ஒத்துழைப்பினை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பாமல் மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தாமல் செயற்படுங்கள் – என்றார். (ஓ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த குழுவினர், அந்த இளைஞர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்துவதற்கு முயன்றுள்ளனர். இதையடுத்து அந்த இளைஞர்கள் அருகில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து தப்பியுள்ளனர்.

எனினும் வீட்டின் முன்னால் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேற்படி இளைஞர்களின் மோட்டார் சைக்கிள் மீது வாள் வெட்டுக்குழுவினர் கோடரியால் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதையடுத்து அங்கு கூடிய மக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

இதையடுத்து வாள்வெட்டுக் குழு தப்பிச் சென்றுள்ளது. பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸார் இந்த இளைஞர்களைப் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

யாழ். நகருக்குள் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஓ)

# இ.போ.ச. - தனியார் பஸ் தரப்புகள் வவுனியாவில் தொடர்ந்து முறுகல்

வவுனியா, பெப்.02

வவுனியாவில் நேற்றுக் காலை இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து ஆகியவற்றின் சாரதி, நடத்துனர்களுக்கிடையில் ஏற்பட்ட முறுகல் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபையின்வவுனியாசாலைஊழியர்கள் நேற்று மதியம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவில் இருந்து வந்த இலங்கைபோக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து ஆகியவற்றின் சாரதி, நடத்துனர்களுக்கிடையில்நேற்றுக்காலை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கைகலப்பொன்று ஏற்பட்டது. இதையடுத்து கைகலப்பில் ஈடுபட்ட இருவர் வவுனியா பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில்தமக்குப்பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து வெளியேறிய இ.போ.ச பேருந்துகள் பழைய பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன. இதன்போது அங்கு வந்த வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அப்பகுதியில் பேருந்துகளை நிறுத்தி வைத்து போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காது போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுமாறு வலியுறுத்தினார்.

இதையடுத்து இ.போ.ச. பேருந்துகளை எடுத்துச் சென்ற அதன் சாரதிகளும், நடத்துனர்களும் தமது வவுனியா சாலையில் நிறுத்திவிட்டு அங்கிருந்த ஊழியர்களுடன் இணைந்து பணிப்புறக்கணிப்பில்ஈடுபட்டனர்.

இ.போ.ச. வவுனியா சாலை முகாமையாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும், பழைய பேருந்து தரிப்பிடத்தில் இருந்தே தமது சேவையைத் தொடருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்னும் இரு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது.

இரு தரப்பினருடனும் பொலிஸார் மேற்கொண்ட பேச்சுக்களையடுத்து சில மணி நேரங்களின் பின்னர் நிலைமை வழமைக்குத்திரும்பியது. (ஓ-100)

## உள்ளூரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போதைய அரசு வழக்குத் தொடுப்பதன் மூலமும், சிறைப்பிடிப்பதன் மூலமுமே பிரச்சினைகளைத் தீர்க்க முனைகின்றது. கலந்துரையாடல் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். எமது ஆட்சியின் போது புலனாய்வுப் பிரிவினர் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## சுமந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பானவர்களை விரைவில் அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராகவிசாரணைநடத்தப்படவேண்டும் எனவும் உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்பின் ஊடாக தமிழ் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரனுக்கு நன்றிதெரிவித்து உலகத்தமிழர் பேரவை மற்றும் புலம் பெயர் தமிழர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசியல் வட்டாரத்தில் மீண்டும் வன்முறைகள் ஏற்படாமல் இருப்பதற்கு பொது மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் உலகத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## ஜன.13...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கின்றனர்.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களான ஞானசேகரலிங்கம் ராஜ்மதன் (திருகோணமலை), லூயிஸ் மரியாம்பிள்ளை அஜந்தன் (மருதங்கேணி), காராளசிங்கம் குலேந்திரன் (கிளிநொச்சி), முருகையாதவேந்திரன் (கிளிநொச்சி) ஆகிய நால்வரே முதலில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தற்போது, கடந்த திங்களன்று மன்னாரில் வைத்து மற்றொரு சந்தேக நபரான வேலாயுதன் விஜயன் என்பவரையும் இவ்விடயம் தொடர்பாகத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (உ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் மார்ச் மாதமானது மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை ஈட்டியுள்ள முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கைப் பிரஜைகளுக்கும் மிகவும் தீர்க்ககரமான தருணமாகும்.

சர்வதேசத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும், உண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள விடயங்களுக்கும் இடையிலான இடைவெளியைக் காணும் போது இலங்கை தொடர்பில் இன்னுமொரு பிரேரணை எமக்கு அவசியமாக உள்ளது.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படலாம். ஆனால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றமை உரியவகையில் இடம்பெறுகின்றனவா என்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேசத் தரப்பினரும் அக்கறையுடைய உள்ளூர் தரப்பினரும் தொடர்ச்சியாக அழுத்தத்தைக் கொடுப்பதும், ஜெனீவா உறுப்பு நாடுகள் இலங்கையை தொடர்ந்தும் கண்காணிப்பதும் மிகவும் அவசியமாகும்.

இந்தத் தீர்மானத்தில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளும் விசாரணையாளர்களும் வழக்குத் தொடுநர்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என் கூறப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளும் வரவேற்றிருந்தனர்.

எனினும் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில், இதுவரை இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படாமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. (ஓ)

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் கைதுசெய்யப்படுகின்றவர்களும் இச்சம்பவங்களுடனும் தொடர்புடையவர்கள் பெரும்பாலானோர் பாடசாலை மாணவர்களாகவே இருக்கின்றனர்.

குறிப்பாகப் பதினெட்டு வயது முதல் இருபத்தியொரு வயதிற்குட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். – என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. (உ)

## ஆட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி இவ்வாறு கூறினார்.

புதிய அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்த மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை இழப்பதற்கு ஒருபோதும் வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

கடந்த அரசு செய்ததைப் போன்ற ஊழல், மோசடிகளை மேற்கொண்டு தவறிழைப்பதற்காக மக்கள் புதிய அரசை ஆட்சிக்குக் கொண்டுவரவில்லை.

ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு மிகவும் விருப்பமாக உள்ளனர். கடந்த ஆட்சியில் இருந்த சிறப்புரிமைகள் இல்லாமல் போனதையிட்டு அவர்கள் ஏங்குகின்றார்கள்.

அதிகாரத்தில் இருந்து கொண்டு அரச சொத்துக்களையும், திறைசேரியையும், தனிப்பட்ட சொத்தாகப் பயன்படுத்தியோர் மீண்டும் ஆட்சிக்கு வந்து அதே சிறப்புரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றனர்.

கடந்தஆட்சியிலுள்ளவர்கள் விமானங்களை எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பும்போது எவ்வளவு கோடிக்கணக்கான செலவுகளை விமான நிலையங்களுக்கு ஏற்படுத்தினார்கள் என்பது எனக்குத் தெரியும். கடந்த ஆட்சியாளர்கள் ஹெலிக்கொப்டரை வீட்டிலுள்ள மோட்டார் சைக்கிள் போன்று பயன்படுத்தினார்கள்.

அரசைக் கவிழ்ப்போம் என கடந்த ஆட்சியாளர்கள் கூறினால், ஜனாதிபதி என்ற வகையில் அவர்கள் காலத்தில் செய்த ஊழல்கள் பலவற்றை மக்களுக்கு நான் தெரியப்படுத்துவேன்.

இருப்பினும், கடந்த ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிகளைச் சிறிது சிறிதாகவே மக்களுக்குத் தெரியப்படுத்துவேன். முழு விடயங்களையும் ஒரே தடவையில்கூறமுடியாது. அவற்றை ஒவ்வொன்றாக வெளியிடுவேன்.

எவ்வாறான அரசியல் கருத்தைக் கொண்டிருந்தாலும் அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைத்து அரசியல் கட்சிகளினதும் பொறுப் பாகும்.

பலமான அரசாக முன்னோக்கிச் சென்று நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாகக் கட்டியெழுப்புவதே எமது குறிக்கோள்.

ஜனாதிபதியாக ஏழை மக்களின் குரலுக்குச் செவிமடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். – என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, தயா கமகே, கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ, முதலமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஓ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல. 30 இக்கு கஸ்தூரியார் வீதியிலுள்ள நியூ பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.